# விடியல்

## The Dawn

***மாத இதழ், பொழுது – 50***
***ஜூன், 2013***
**பக்கங்கள் - 52, தனிச்சுற்றுக்கு மட்டும்**



***சிறப்பாசிரியர்***
**முனைவர் நா. கண்ணன்**
கல்லூரி முதல்வர்

***ஆசிரியர்***
**முனைவர் மா. கார்த்திகேயன்**
தமிழ்த்துறைத் தலைவர்

***இணை ஆசிரியர்***
**முனைவர் ப. சரவணன்**
தமிழ் உதவிப் பேராசிரியர்

***ஆசிரியர் குழு***
தமிழ் உதவிப் பேராசிரியர்கள்
அனைவரும்



***வெளியீடு:***

***தமிழ்த்துறை***

***கே.எஸ். ரங்கசாமி***
***கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)***
*திருச்செங்கோடு – 637 215,*
*தமிழ்நாடு, இந்தியா.*
*fb: facebook.com/ksrcasthamizh.vidiyal*
*Blog: ksrcasthamizh.blogspot.in*
*Email : vidiyalmagazhine@gmail.com*
*Website: ksrcas.edu*



© ***K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)***

*All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the publisher.*


## ☺ 50 ☺ பொன்னிதழ் ☺ 50 ☺

*விடியல் தன் 50ஆவது இதழினை எட்டியுள்ளது. இந்த 52 பக்க இதழ் விடியலின் பொன்னிதழ். மாணாக்கர்களின் படைப்பாற்றலை வளர்க்கும் நோக்கத்துடன் தொடங்கப்பெற்ற இந்த விடியல் தன் நோக்கத்தைச் செம்மையாக நிறைவேற்றிவருகின்றது என்பதற்கு, விடியல் வழியாக உருவான மாணவப் படைப்பாளர்களே சாட்சி.*

*விடியல் இதழைத் தொடங்க அனுமதியும் நிதியும் வழங்கிய கல்லூரி நிர்வாகத்திற்கும் பற்பல ஆலோசனைகளை நல்கி, விடியலைச் செம்மைப்படுத்திவரும் விடியல் இதழின் சிறப்பாசிரியர் - கல்லூரி முதல்வர் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.*

*விடியல் இதழுக்குப் படைப்பு களை நல்கிவரும் ஆசிரியப் பெருமக்களுக்கும் மாணவப் படைப்பாளர்களுக்கும் விடியலைப் படித்து, விமர்சனங்களை வழங்கி வரும் வாசகர்களுக்கும் நன்றி.*

*இம்மாதத்தில் உலகச் சுற்றுச் சூழல் பாதுகாப்பு நாள் கொண்டாடப் படுகின்றது. ஆதலால், அது சார்ந்த படைப்புகளை இவ் இதழில் வெளியிட்டுள்ளோம்.* - ***ஆசிரியர்***

# உள்ளடக்கம்


***கட்டுரைகள்***

கேட்க நினைத்த வினாக்கள் 03
தமிழுக்குப் பெருமை 04
Victoria Falls 10
வைகாசி மாதம் 11
அச்சம் தவிர் 13
பண்டைக்கால ஆய்வகம் 15
கோவில்தரும் எனர்ஜி 17
இனி ஒலிக்காத குரல் 30
மூன்று எதிர்ப்புகள் 31
முகௌக் கற்குகை 40
மதுப்பழக்கம் மதிப்பைக்கெடுக்கும் 43
ரக்பி விளையாட்டு 45
சித்தர்களும் ஆசனங்களும் 47
தன்னியக்கம் 51

***கவிதைகள்***

அம்மாவின் ஆசை 03
கண்ணீர் 05
விடியலின் அழைப்பு 05
அன்னை 06
முயற்சி 10
பெண் 13
நட்பு 15
கவிஞருக்குச் சமர்ப்பணம் 15
தாயும் தாய்மையும் 16
அலையின் செய்தி 16
மரம் வளர்ப்போம் 20
தன்னம்பிக்கை 20
மழையின் நிறம் 20
தன்னம்பிக்கை 21
அன்பைத்தேடி 22
அன்பு 22
தீய பழக்கங்கள் 22
கண்ணீர் 23
அம்மா 23
வறுமை 23
அன்பு 26
சாதி 26
அன்பு 28

***குறுங்கதைகள்***

*அன்பு* 24
*மரம்* 27
*ஓட்டகத்தின் கழுத்து* 29
*மரம்வளர்ப்போம்* *38*
*தீய பழக்கம்* *41*

***சங்கச் சாரல் - 15***

இயற்கை உணர்த்தும் வாழ்வு 06


## அறிவிப்பு

கே.எஸ். ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) தமிழ்த்துறை, பட்டாசு நகர் அரிமா சங்கத்துடன் (சிவகாசி) இணைந்து **“பலதுறை நோக்கில் கண்கள்”** என்ற பொருண்மையில் ஒருநாள் தேசியக் கருத்தரங் கினை 20.09.2013 ஆம் நாள் நடத்த உள்ளது. பேராளர்கள் கட்டணம்: 450.00, ஆய்வாளர்கள் கட்டணம்: 250.00. கட்டுரைகளைப் பெறும் இறுதி நாள்: 16.08.2013

தொடர்புக்கு:
முனைவர் மா. கார்த்திகேயன்,
தமிழ்த்துறைத்தலைவர்,
9894953535.

# அம்மாவின் ஆசை

*"புத்தம் புது உலகில்*
*புன்னகையுடன்*
*உதயமானவனே! செல்வமே!*
*உதயமாகியும் மூச்சு விடாமல்*
*ஏன் காத்திருக்கிறாய்?*
*அணையில் தேங்கிய நீர்*
*சின்னஞ்சிறு விரிசலில்*
*வெடித்ததுபோல்*
*பீறிட்டு கத்தி அழு மகனே!*
*கத்தி அழு!*
*உன் அன்னையைப் பார் -*
*விழித்துக்கொள்.*
*உனக்காக இந்த உலகம்*
*காத்திருக்கிறது.*
*காத்திருந்து காத்திருந்து*
*கிடைத்த செல்வமே!*
*உலகைக் காப்பாற்ற வந்தவனே!*
*விழித்துக்கொள்.*
*என்னை அம்மா என அழைக்க*
*வந்தவனே எழு!*
*பூத்துக் குழுங்கும் உன்*
*அழகு முகத்தைக் காணவுள்ள*
*என்னை ஏமாற்றி விடாதே."*

**பா. ஹேமலதா,**
*இளங்கலை கணிதவியல் இரண்டாமாண்டு*
*ஆ பிரிவு.*

## கேட்க நினைத்த வினாக்கள்

**ச. நித்யகௌசல்யா,** *இளங்கலை*
*உயிர்வேதியியல் மூன்றாமாண்டு*

### *ஏப்பம் ஏன் வருகின்றது?*

*நாம் பசிக்கும் போது அவசர அவசரமாக உணவை உள்ளே தள்ளுகிறோம். அப்பொழுது உணவுடன் சேர்ந்து காற்றும் உட்சென்று விடுகிறது. உட்சென்ற காற்று வெளிவர என்ன வழி? தொண்டைதான். எனவே, பெரியதாக நாம் வாயைத் திறந்தபடி, உடல் அசைவின் மூலம் உள்ளிருக்கும் காற்றை ஏப்பமாக வெளிவிடு கின்றோம்.*

### *ஏன் புறை ஏறுகிறது?*

*தொண்டைக்கு அடியில் மூச்சுக் குழாயும் உணவுக் குழாயும் அடுத்தடுத்து அமைந்துள்ளன. சாப்பிடும் உணவை விழுங்கும்போது மூச்சுக்குழல் பாதை தானாவே மூடிக்கொண்டுவிடும். பேசிக் கொண்டோ அல்லது அவசர கதியில் சாப்பிடும் போதோ மூச்சுக்குழல் பாதை மூடப் போதிய அவகாசம் இல்லாததால் அப்பாதையில் சில உணவுத் துகள்கள் மாட்டிக் கொள்ள நேரிடும். இதுவே புறை ஏறுதலுக்குக் காரணமாக அமைகின்றது.*

## கொட்டாவி விடக் காரணம் என்ன?

மூளைக்குத் தேவையான ஆக்சிஜன் கிடைக்காதபோது நமக்குக் கொட்டாவி வருகிறது. வாயை அகன்று விரித்து மூடும்போது வாயின் மூலமாகத் தேவையான காற்று உள்ளே சென்று மூளைக்குத் தேவையான ஆக்சிஜன் கிடைத்து விடுகிறது.

## வியர்வை வருவது ஏன்?

நமது உடலில் ஏற்படும் தொடர்ந்து வளர்சிதை மாற்றங்கள் உடலின் வெப்பநிலையை 98.4°F மேல் உயரவிடாமல் கட்டுப்படுத்துகின்றது. உடலின் வெப்பநிலை உயர்வதால், மூளையின் கட்டளைப் படி குளிர்ச்சி மையம் செயல்பட்டு வளர்சிதை மாற்ற அளவைக் குறைக்கும்போது வியர்வை வெளி வருகின்றது.

## ஏன் குறட்டை விடுகின்றோம்?

மூக்கிற்குப் பதிலாக வாய் வழியாக மூச்சுவிட்டுத் தூங்கும் போது காற்று வாயின் வழியாகச் சென்று வாயிலுள்ள அண்ண எலும்பின் மேலுள்ள தசையை மிகுதியான வேகத்தில் அதிர்வடையச் செய்வதால் குறட்டைச் சப்தம் கேட்கின்றது.

# தமிழுக்குப் பெருமை

தமிழகச் சட்டசபையில் விதி எண் 110இன் கீழ் அமைந்த ஓர் அறிக்கையின் வழியாக, “பெருமை வாய்ந்த தமிழ்மொழியைச் சிறப்பிக்கும் வண்ணம், அமெரிக்க நாட்டின் பெருமையையும், புகழையும் உலக அளவில் பரப்பும் வகையில் அமைந்துள்ள சுதந்திர தேவி சிலையைப் போல், தமிழர்களின் நாகரிகம், பண்பாடு, இலக்கியச் செல்வங்கள், கட்டடக்கலைத்திறன் ஆகியவற்றை உலகிற்கு எடுத்துக் காட்டும் வகையில், சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் ரூ. 100 கோடி மதிப்பீட்டில் தமிழ்த்தாய் சிலை நிறுவப்படும் என்றும் ஐவகை நிலங்களான குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் மற்றும் பாலை ஆகியவற்றின் மாதிரிகளை உருவாக்கித் தமிழ்த்தாய்ப் பூங்கா ஒன்றும் அங்கு உருவாக்கப்படும் என்றும் திருக்குறளை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த வெளிநாட்டு தமிழறிஞர் ஜி.யு. போப்-இன் தமிழ்த்தொண்டைப் போற்றும் வகையில், சிறந்த தமிழ் மொழிபெயர்ப்பாளர் ஒருவருக்கு ஜி.யு. போப் விருதும், சீறாப் புராணத்தை இயற்றிய உமறுப்

*புலவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டைப் போற்றும் வகையில், தமிழுக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் தொண்டாற்றும் தமிழ் அறிஞர் ஒருவருக்கு உமறுப் புலவர் விருதும் வழங்கப்படும் என்றும் தமிழக முதல்வர் தெரிவித்துள்ளார்.*

## கண்ணீர்

*"பல்லாயிரம் ஆண்டுகளாக*
*நம்மைத் தாங்கி*
*இன்று நம்மாலே*
*அழிந்து வருகிற இந்தப்*
*பூமிப் பந்தைக் காக்க*
*நம்மால் முடியவில்லையே!.*
*இயன்றவரை நம் முன்னோர்களால்*
*பாதுகாத்து வந்த இயற்கை*
*செல்வங்கள் இன்று நம்மால்*
*அழிந்து வருகிறதே!*
*எப்பொழுதுதான் தீருமோ*
*இந்தப் பூமிதாயின் கண்ணீர்"*

**மீனா,** *இளங்கலை கணிணி பயன்பாடு*
*இரண்டாமாண்டு இ பிரிவு*

## *Best Advice for Society*

*Traffic Department*

*"Donate Blood" But*
*Not on Roads!*

*Forest Department*

*"Shoot the Bird" with Camera.*
*Not with Gun!*

*G. Anandha Kumar II Bsc. TFD*

## விடியலின் அழைப்பு

*"நீ ஊருக்கு உதவுகின்றாய்*
*ஒப்புக்கொள்கின்றேன் எண்ணிப்பார்*
*அணைந்த தீபம் கூட*
*யாருக்கும் வழி ஆகாது.*
*முதலில் உன்னை உயர்த்து - பின்னர்*
*உலகத்தை எடுத்து*
*விரல் நுனியில் வைத்து*
*அதனை உனக்கும் மேலாக*
*உயர்த்து.*

*உலகம் உன்னைப்*
*பார்த்து கேலியாய்ச்*
*சிரித்தாலும் கலங்காதே!*
*மனம் தளராதே!*
*உலகத்தை எவ்வாறு*
*சிந்திக்க வைப்பது என்று*
*நீ சிந்தித்துப்பார்.*

*முடியாது என்பதை உலகம்*
*உனது முதுகில் வேண்டுமானாலும்*
*எழுதட்டும் ஆனால்,*
*உனது மனத்தில் எழுத*
*அனுமதியாதே*
*விழிக்கவில்லையென்றால்*
*சூரியன் கூட ஒரு*
*கரித்துண்டுதான்!*

*இப்பொழுதே நீ விழித்து*
*உலகத்தையும் விழிக்க வை!*

*உறங்கும்போது கூட உனது*
*விழிப்புணர்வு விழித்தே இருக்கட்டும்.*
*இல்லாவிடில் உனது*
*விழிகள்கூட உன்னை*
*வெறுக்கச் செய்துவிடும்.*

*உறங்குவது ஓய்வெடுக்கவே தவிர*
*உன்னைத் தொலைப்பதற்கு அல்ல.*
*சோம்பலை மணப்பதற்கு அல்ல.*
*உன் விழிகளை வெளிப்படுத்த*
*இமைகளை மூடினாலும்*
*உனது பார்வை*
*படர்ந்தே இருக்க வேண்டும்.*
*விழிப்புதான்*
*உன் விடியலின் அழைப்பு"*

**ஆர். மேகநாதன்**
*இளங்கலை வணிகவியல் கணிணி பயன்பாடு*
*இரண்டாமாண்டு இ பிரிவு.*

## அன்னை

*"கண்ணிற்குக் கருவிழிபோல்*
*உயிருக்கு மூச்சுக்காற்றைப் போல்*
*சூரியனுக்குச் சந்திரனைப் போல்*
*பகலுக்கு இரவினைப் போல்*
*எனக்குள் உயிராய் இருக்கும் என்*
*அன்னையே நீர் வாழ்க."*

**டி. சாஹினா**
*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

## இயற்கை உணர்த்தும் வாழ்வு

**முனைவர் த. கண்ணன்**
தமிழ் உதவிப்பேராசிரியர்

*நாம் சிலவற்றை இயற்கை என்றும் சிலவற்றைச் செயற்கை என்றும் வேறுபிரித்துக் கூறி வருகின்றோம். இயல்பானது இயற்கை என்றும் இயல்பில் மாறுபட்டது செயற்கை என்றும் கூறப்படுகிறது.*

*மரம், செடி, கொடிகள் இயற்கை. இந்த மரம், செடி, கொடிகளால் ஆன வீடு மனிதனின் செயற்கை. மலைகளில் உள்ள குகைகளைத் தன் வீடாகக் கொண்டான். அது இயற்கை. செங்கல், சிமெண்ட், முதலியவற்றால் வீட்டை உருவாக்கினால் அது செயற்கை.*

*பொதுவாக, இயற்கை என்பது இயற்கையாக இருக்கும் வரை அதனால் பாதிப்புகள் இருக்காது என்றும் இயற்கையில் செயற்கை புகுந்துவிட்டால் அதனால் பாதிப்புகள் அதிகம் என்றும் கருத்துகள் நிலவிவருகின்றன.*

*இயற்கை – செயற்கை என்று வரும்போது, மனிதன் என்பவன்*

*இயற்கையா அல்லது செயற்கையா என்ற வினா எழுகின்றது. இந்த வினாக்கள் பிற விலங்குகளுக்குப் பொருந்தாது. ஏன் என்றால் அணுக்கள் எப்போதும் இயற்கையாகவே உள்ளன.*

*சான்றாக, எந்தவொரு நாயும் மான்போல் வேடம் இட்டுக் கொள்வதில்லை. எந்தவொரு பசுவும் புலி போலவோ அல்லது எந்தவொரு புலியும் பசுபோலவோ ஒப்புக்காட்டிக் கொள்வதில்லை.*

*எந்தவொரு வாழையும் மாங்காய் காய்ப்பது இல்லை. எந்த மாமரமும் வாழைத்தார் போடுவதில்லை. அவை எல்லாம் தனக்கான இயல்பைவிடுத்து வேறு வேடம் கொள்வதில்லை.*

*அவையெல்லாம் அதனதன் இயல்பில் வாழ்கின்றன. குயில் தன்னைவிட மயில் அழகானது என்று நினைப்பது இல்லை. தன் குரலே இனிமையானது என்று பெருமை கொள்வதும் இல்லை. உயர்வு என்றும் தாழ்வு என்றும் புகழ் என்றும் இழிவு என்றும் வேறுபிரித்துக் காண்பதெல்லாம் இந்த மனிதனுக்குரியவையே.*

*இன்று மனிதன் தனக்கான இயல்பு எது என்றே தெரியாமல் வேடம் போட்டுக் கொள்கிறான். புலியின் குணத்தை உள்ளே கொண்டு வெளியில் பசுவாய் வேடம் போடுகிறான். நாயின் குணத்தை நன்கு புதைத்து வைத்து மான்போல் காட்சிதருகின்றான். அதனால் மனிதன் இயற்கையிழந்து நிற்கின் றான்.*

*இயற்கையிழந்தவன் இன்று பல இன்னல்களுக்கு உட்பட்டு உள்ளான். இன்னல்களிடம் இருந்து விடுபட்டு இனிதே வாழ வேண்டும் என்றால் என்ன செய்யவேண்டும்? இவன் இவனுக்கான இயற்கையை இனம்காண வேண்டும். இயலாவிட்டால் பிற இயற்கையைப் பார்த்து தமக்கான இயற்கையைக் கற்றுக் கொள்ள வேண்டும்.*

*சங்க காலத் தலைவன் இயற்கையிடம் இருந்து தனக்கான இயற்கையைக் கண்டறிந்து கற்றுக் கொண்டவன் என்பதை அறிய முடிகிறது.*

*இயற்கையாக மட்டுமே வாழ்ந்த மனிதன் இன்பமாக வாழ்ந்தான். இயற்கை மனிதன் தனக்கான சொத்துக்களையோ, தனக்கான உணவு களையோ சேமித்து வைத்துக் கொள்ள வில்லை. பொருளைத் தேடியோ அல்லது புகழைத் தேடியோ அவன் வேறிடம்*

*செல்லவில்லை. உணவிற்காக இடம் பெயர்ந்தான். அப்போதும் அவன் தன் துணையையும் தன் குழந்தை களையும் விடுத்துச் செல்லவில்லை. கூட்டமாகவே சென்றான். தன் இன மாகவே இருந்தான்.*

*இன்று உயர்வுக்கும் தாழ்வுக்கும் இடையில் பணம் ஒருபுறம் பயம்காட்ட, பதவி ஒருபுறம் பதட்டம் செய்ய மனிதன் படாதபாடுபடுகிறான். இந்த மனிதனின் கதை இருக்கட்டும். சங்கத் தலைவன் இயற்கையிடம் கற்றுக் கொண்ட இயல்பு வாழ்க்கை என்ன என்பதைக் காண்போம்.*

*பாலைபாடிய பெருங்கருங்கோ பாடியுள்ள இப்பாடலானது,*

***"உள்ளார் கொல்லோ தோழி கள்வர்தம்***
***பொன்புனை பகழி செப்பங் கொண்மார்***
***உகிர்நுதி புரட்டு மோசை போலச்***
***செங்காற் பல்லி தன்றுணை பயிரும்***
***அங்காற் கள்ளியங் காடிறந் தோரே"***

*(குறுந்தொகை-16)*

*என்பதாகும். இப்பாடலின் சூழலானது.*

*தலைவன் தலைவியர் இல்லற வாழ்க்கையில் இனிதே வாழ்ந்து வரும் வேளையில் தலைவன் பொருள்தேடிச் செல்கிறான். தலைவி யை இல்லத்தில் இருக்கவிட்டுப் பொருள் தேடிச் செல்கிறாள். தலை வனின் பிரிவால் தலைவி பெரிதும் துன்பம் அடைகிறாள். தலைவியின் துன்பத்தை அவளின் தோழி காண் கிறாள். தலைவியைத் துன்பத்தில் இருந்து மீட்க வேண்டும் எனத் தோழி தலை வியிடம் பேசுகின்றாள். அவ்வாறு தோழி பேசும் கூற்றே இப்பாடல்.*

*இத்தோழி என்ன சொல்கிறாள் தெரியுமா? தோழி! (தலைவியே!) கள்ளிக் கொண்ட பாலையைக் கடந்து பொருள்தேடிச்சென்ற நம் தலைவர் நம்மை நினைக்காமலா இருப்பார்? நினைப்பார். எப்படி யென்றால், கள்ளிக் காட்டில் பல்லிகள் உள்ளன.*

*அங்குள்ள ஆண் பல்லியானது தன் துணை யாகிய பெண்பல்லியை அழைக்கும் ஒலியைக் கேட்பார். இந்த ஒலியில் இருந்து தலைவர் நம்முடன் வாழ வேண்டும் என்ற வாழ்வைக் கற்றுக்கொண்டு நம்மை நினைந்து வருவார்.*

*ஒலியெழுப்பும் இந்த ஆண் பல்லியானது செம்மையான கால் களை உடையது (செங்காற் பல்லி) எனினும் அப்பல்லி, தன் துணையை விடுத்து வேறிடம் செல்லவில்லை.*

*ஆண்பல்லியின் ஒலிக்குறிப்பு தன் துணையை அழைப்பது. (இன்று*

*மக்கள் பல்லி கத்துவதைச் சகுனம் என்று கொள்கின்றனர். இப்பாடல் வழி அந்த ஒலியின் பொருளை அறிந்து கொள்க.)*

*இங்குத் தலைவன் கற்றுக் கொள்ளும் செய்தியானது, எப்போதும் துணையைப் பிரிந்து வாழக் கூடாது என்பதும் எந்தச் சூழலிலும் தன் துணையைவிடுத்து வேறு இணை தேடக்கூடாது என்பதுமாகும்.*

*இந்தப் பல்லியின் வாழ்வு எங்கு நடைபெறுகிறது எனில், கள்ளிக் காட்டில், அதாவது பாலைநிலத்தில். பாலை என்பது வறட்சி. வாழ்வில் வறட்சி ஏற்பட்ட போதும் வாழ்விடம் மாற்றம் வேண்டாது தன் துணையையும் பிரியாது இனிதே வாழும் இயற்கை வாழ்வு இங்குப் பெறப்படுகிறது.*

*ஆண் பல்லியின் ஓசைக்கு இப்பாடல் உவமை ஒன்று தருகிறது. அந்த உவமையானது.* ***"கள்வர்தம் பொன்புனை பகழி செப்பங்கொண்மார் உகிர்துதி புரட்டும் மோசை போல"*** *என்பதாகும். அதாவது, இரும்பினால் செய்யப்பட்ட அம்பைச் செப்பம் செய்துவிட்டு அதன் கூர்மையைச் சோதிப்பதற்காகத் தன் நக நுனியைச் சீவிப்பார்ப்பர். அப்போது எழும் ஓசை போன்றது என்பதைக் குறிப்பிடுகிறது.*

*கள்வர் தம்முடைய அம்பைத் தீட்டுவதன் காரணம் வழிப்போ வோரைத் துன்புறுத்துவதற்கு. அந்த ஓசை இனிமை செய்வதில்லை. அது துன்பத்தைச் செய்வது. அந்த ஓசை போன்றது இந்தப் பல்லியின் ஓசை.*

*அதாவது தன் துணையுடன் எந்தக் காலத்திலும் எதற்காக வேணும் பிரியாமல் வாழ வேண்டும் எனும் கருத்தைப் பல்லியின் ஓசை அறிவிக்கும்போது, அவ்வோசை துன்பத்தைத் தருமே அன்றி மகிழ்ச்சியைத் தராது.*

*இந்த ஓசையைக் கேட்டும் தலைவன் இயற்கை வாழ்வைக் கற்றுக்கொண்டு, தலைவியைத் தேடி வந்து மகிழ்வான் என்பது புலப் படுகின்றது. எனவே, நாமும் நம் வாழ்வில் இயல்பாக, இயற்கையாக இருப்போம். இன்பமாக வாழ்வோம். உயர்வும் வேண்டாம் தாழ்வும் வேண்டாம். சமநிலையில் மகிழ் வோம்.*

# Victoria Falls

*The Victoria Fall is considered to be the largest water fall in the World. They are not the widest water fall or the highest water fall but with a dimension taken into account in clouding almost the largest flow rate they are considered tube the biggest contain of Falling water in the World. Surpassing the Magnificent Niagara falls and Iguacu falls the Victoria falls lower mean annual flow rate compared to these two gains is only because of reduced flow t has during the long dry season of southern Africa.*

*A.M. Dhivya II B.Sc. Chemistry*

# முயற்சி

*"சூரிய விழிகளைத் திறந்திடு!*
*இளைஞனே*
*உனது சூரிய விழிகளைத் திறந்திடு!*
*துயர இரவுகள் பறந்திடும்*
*கனவு மேகங்களுக்குள்*
*பார்வையைப் புதைத்து*
*பகலையும் இரவாக்கியது போதும்*
*உனது சூரிய விழிகளை*
*உடனே திறந்திடு!*
*சாதனை வானம்*
*உன்னைத் தரிசிக்க*
*தனிமையில் தவமிருக்கிறது.*

*விடியலும்*
*உனக்கொரு விழா எடுக்க*
*விழித்திருக்கிறது*
*விரைந்து எழுந்திரு*
*வெற்றிக் கீற்றுகளில்*
*எப்பொழுதும் ஊஞ்சலாட*
*உழைப்புக் கரங்களை*
*வானம் தொடும்வரை உயர்த்து.*

*வாழத்துடிப்பவனுக்கு*
*வானம் வளைந்து கைகொடுக்கும்.*
*மேகங்களும் வாகனங்களாக*
*வந்தழைக்கும்.*

*சோம்பிக்கிடப்பவனுக்கு*
*ஏணி கூட எதிரிதான்.*
*எழுந்து நடப்பவனுக்கு*
*எதிரியும் தோணிதான்.*

*நீயே ஓர் எரிமலை*
*என்பதை மறந்துவிட்டு,*
*அனலுக்காக ஏன் அலைகிறாய்?*

*வியர்வையை விரித்து*
*வானத்தை அளக்கும்*
*இலட்சியங்கள்*
*சிறகினை விரிக்கட்டும்.*

**மூ. விவேக்குமார்**

*இளங்கலை வணிகவியல் கணிணிப்*
*பயன்பாடு மூன்றாமாண்டு ஆ பிரிவு*

# வைகாசி மாதம்

திருமதி. லோ. புனிதவள்ளி
*தமிழ் உதவிப்பேராசியர்*

*ஒவ்வொரு மாதமும் பூரணச் சந்திரன் சஞ்சரிக்கும் நட்சத்திரத்தின் பெயரே தமிழ் மாதத்தின் பெயராக அமைகின்றது. வைகாசி மாதத்தில் உச்சம் பெற்ற சந்திரன் முழுநிலவாகத் தோற்றமளிக்கும் பௌர்ணமி நாளில் விசாக நட்சத்திரத்தில் சஞ்சரிக்கின்றார். அதனாலேயே இந்த மாதம் 'வைசாக' மாதம் என்றிருந்து பின்னாளில் 'வைகாசி' மாதம் என்றானது.*

*வாழ்வில் வசந்தம் என்பார்கள் அல்லவா! அந்த வசந்தகாலம் என்பது சித்திரை, வைகாசி மாதங்களே. இளவேனில் என்பது கோடைக்காலம். இளவேனில் என்றால் அழகு என்று பொருள். சித்திரையும் வைகாசியும் வசந்த ருது. அதாவது இளவேனிற் காலம். உத்தராயண காலத்தின் ஐந்தாவது மாதமான வைகாசியில் வெயிலின் கொடுமை அதிகமாக இருக்கும்.*

*கடும் வெயிலை அக்னி நட்சத்திரம் கத்திரி என்றெல்லாம் சொல்வது வைகாசியில் தான். ஆனாலும் சாஸ்திரம் வைகாசியில் பெருமழை பொழியும் என்கிறது. சமஸ்கிருத சுலோக மொன்றில்,*

***"பூமியின் வெடிப்புகள் வெடிப்புகளின் ஊடே பள்ளமடை***
***பெருமழை பொழியும் போது அதனூடே நீர் ஓடி நதிகளில்***
***தெளிவுடன் பாய்ந்தோடி ஸ்படிகமெனத் திகழும் வைகாசி"***

*என்று நயம்படக் கூறப்பட்டுள்ளது.*

*வைகாசி என்று சொல்லுவதையே விகாஸம் என்று சொல்வதுண்டு. விகாஸம் என்றால் மலர்ச்சி என்று பொருள். வேதவியாசர் வகுத்த பதினெட்டு புராணங்களில் ஸ்காந்த புராணம் மிகப் பெரியது. இதில் ஏழாவதான வைஷ்ணவ காண்டத்தில் வைசாக மகாத்மியம் என்று 25 அத்தியாயங்களில் எழுதி உள்ளார்.*

*அம்பரீஷ மன்னனுக்கு நாரதர் வைகாசி மாத மகிமையைச் சொல்கிறார். வித்யைகளில் வேதம் எப்படி உயர்ந்ததோ மந்திரங்களில் பிரணவம் எப்படி உயர்ந்ததோ நதிகளில் கங்கை எப்படி உயர்ந்ததோ அதுபோல் மாதங்களில் வைகாசி உயர்ந்ததாகச் சொல்லப்படுகிறது. வைகாசி மாதத்தில் செய்யும் சகல தானங்களும் குறையாமல் பெருகும் பலனைக் கொடுக்கும். மிக*

*விசேஷமாக செய்தே தீர வேண்டிய தானங்களில் தீர்த்த தானம் மிகச் சிறந்தது. வசந்த காலத்தில் வரும் வைகாசி மாதத்தில் பானகம், நீர்மோர் ஆகியவற்றைத் தானம் செய்வதால் நாம் கோரிய பலன்கள் அத்தனையும் பெறலாம் என்று புராணம் கூறுகிறது.*

***வைகாசி மாத்தின் சிறப்பு***

*இந்த மாதத்தில் வரும் விசாக நட்சத்திரம், ஞானச்சிறப்பு பெற்றது. சரவணப் பொய்கையில் முருகப் பெருமான் அவதரித்தது இந்தப் புனித நாளில்தான். இந்தத் திருநாளில் முருகப் பெருமானின் திருத்தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும். புத்தர் அவதரித்ததும் வைகாசி மாதப் பௌர்ணமியன்றுதான்.*

*இராமலிங்க வள்ளலார் வடலூரில் சத்தியஞான சபை என்னும் அமைப்பைத் துவக்கி வைத்து தர்ம சாலையில் ஏற்றி வைத்த ஜோதி இன்னமும் ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டுதான் இருக்கிறது. இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் தொடங்கப் பெற்றது ஒரு வைகாசி மாதத்தில்தான்.*

*வைகாசியில் தானம் செய்வதால் மிகவும் பலனுண்டு. தேவர்களும் அசுரர்களும் இணைந்து பாற்கடலைக் கடைந்தபோது அமுதம் வெளிப் பட்டது. வைகாசி மாத ஏகாதசியன்று இறைவன் அதைக் காத்தது துவாதசியன்று. தேவர்கள் அமுதத்தை உண்டது த்ரயோதசி, பௌர்ணமி நாட்களில்.*

*எனவே, வைகாசி மாதத்தில் வரும் ஏகாதசி, துவாதசி, த்ரயொதசி, பௌர்ணமி நாட்களில் செய்யப்படும் தானத்திற்கு ஒன்றிற்குப் பலமடங்கு பலன் கிட்டும்.*

***வைகாசி விசாகப் பெருமை***

*வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் முருகப்பெருமான் அவதரித்தார். வைணவப் பெரியவர் நம்மாழ்வார், ஆழ்வார் திருநகரி என்ற தலத்தில் விசாக நாளில் அவதரித்தார்.*

*ஆண்டு முழுவதும் சந்தனக் காப்பில் மறைந்திருக்கும் நரசிங்க மூர்த்தி வைகாசி விகாசத்தில்தான் சந்தனக் காப்பைக் களைந்து விக்கிரக உருவத்தில் காட்சி தருவார். பின்னர் ஓராண்டு கழித்துத்தான் அக்காட்சியைக் காணமுடியும்.*

# பெண்

*"பெண் வானம் போன்றவள்
அன்பிலும் கண்டிப்பிலும்
அளவில்லாதவள்.*

*மேகம் போன்றவள்
பிறருக்குக் குளிரைத் தருவதில்.
அன்னம் போன்றவள் அழகிலும்
நல்லறிவைத் தனக்குள் சேர்ப்பதிலும்.*

*காற்றுப் போன்றவள் அனைவரிடமும்
எளிதில் பழகுவதிலும்
உபயம் செய்வதிலும்
அபயம் அளிப்பதிலும்.*

*பூமிபோன்றவள் துன்பங்களைப்
பொறுப்பதில்.
தீ போன்றவள்
தீய எண்ணங்களை எரிப்பதில்.*

*கடல் போன்றவள்
மனத்தின் ஆழத்தில்.
அவள் பூ மதிப்போற்கு.
மதியாதவற்குப் புயல்"*

ப. அரவிந்த்
*இளங்கலை கணிணி அறிவியல்
இரண்டாமாண்டு ஈ பிரிவு*

# அச்சம் தவிர்

*பெண் சுதந்திரம் பெண் உரிமை என மேடையில் முழங்குகின்றனர். ஆனால், சமத்துவம் கொடுத்தாலும் சரிவரப் பயன்படுத்தாமல் வாழும் பலர் நம்மிடையே உள்ளனர்.*

*தன்னம்பிக்கையைப் பற்றிப் பல புத்தகங்கள் வாயிலாகப் படித்தும் தனியே வெளியே செல்லப் பயன் படுவதேனோ?*

*ஒருபுறம் இவர்கள் பயப்பட்டுக் கொண்டே இருப்பதால், மறுபுறம் தைரியமாக இவர்களுக்கெனப் போராடும் பலர் துன்பங்கள் பலவற்றை அனுபவிக்கின்றனர்.*

***"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்
தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"***

*எனும்படி அல்லாமல், தன்னைக் காப்பதற்கே தன் தகப்பன் துணைக்கு வரவேண்டும் என வரும்புவோர் பலர்.*

*"எந்தநாளில் ஒரு பெண் தன் உடலில் அதிக நகைகளை அணிந்துகொண்டு இரவு 12 மணிக்குத் தன்னந்தனியாகச் சாலையில் செல்ல முடியுமோ அன்றுதான் ஒரு நாடு முழு*

சுதந்திரமடைந்தது என்று பொருள்" என்றார் காந்தி.

துணிவுடன் நடக்க விரும்பும் பெண்களையும் உன்னால் முடியாது எனத் தடுத்து நிறுத்தி வாதிடும் இந்த அச்சம் மிக்கப் பெண்கள் நெப்போலியனின் வாக்கின்படி முட்டாள்களா? கற்புக்கொரு கண்ணகி, கவிதைக்கு ஒரு காக்கைபாடினியார். கணிதத்திற்கொரு சகுந்தலா என வீண்புகழ் பேசிக்கொண்டிருப்பதை விடுத்து, அரசாங்கமே ஏற்படுத்தியுள்ள சமத்துவ வேலைவாய்ப்பு முறைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் அல்லவா?

கல்லூரி வளாகத்திலேயே பட்டாம் பூச்சிகளாய்ப் பாடித் திரிந்தது போதும். வெளி உலகத்தையும் கொஞ்சம் பாருங்கள். அங்கும் பல சோதனைகள் உண்டு பெண்களுக்கு. சோதனைகளை முறியடித்துச் சாதனை படைக்கும் திறன் கல்லூரியில்தான் வளரத் தொடங்கும்.

வெளி உலகில் நாம் காணும் பிரச்சனைகளான பெண்அடிமை, வரதட்சணை கொடுத்தல் போன்றவை நமக்கு நாமே ஏற்படத்திக் கொண்ட கட்டுக்கள்தான். நாம் உறுதியுடன் வரதட்சணை கொடுக்கமாட்டோம் என்றிருந்தால் பின்னர் யார் உங்களை வற்புறுத்துவார்? அப்படியும் திருமணம் ஆகாவிட்டால் என்ன? திடமனது உங்களிடம் இல்லையா? உத்தரமாய் வாழ உத்தியோகங்கள் பல உண்டு அரசாங்கத்திலே.

மேலும், அரசுப் பணி என்றில்லை, அரசியலில் புதிய பாதையை ஏற்படுத்தவும் உங்களால் முடியும். அரசாங்க வேலையும் அவ்வளவு எளிதில் கிடைத்து விடுவதில்லை. ஆகவே, செய்யும் தொழிலே தெய்வம் என்ற உள்ளத்துடன் அரசாங்கம் ஏற்படுத் தியுள்ள சுயவேலை வாய்ப்பையும் பயன்படுத்திக்கொண்டு தொழில் துறையில் அதிக எண்ணிக்கையில் பெண்களைக் கொண்ட நாடு என இந்தியா பெயர் பெற்றிட உங்கள் பங்கையும் அதற்குச் சேர்த்திடுங்கள்.

சிந்தியுங்கள்! அச்சத்தைக் கைவிட்டுப் புறப்படுங்கள். புதிய பாதையிலே பெரியோர்களின் நல் அறிவுரை எனும் துணைகொண்டு இதுவரை பட்ட பயங்கள் கொண்ட பிரமைகள் யாவும் போதும். தடைகளிலிருந்து கட்டவிழ்த்துத் தயக்கத்தை விட்டொழித்து வாருங்கள். தனியே ஓர் உலகம் அமைத்திட காத்திருக்கின்றன பல நல்ல வாய்ப்புகள்.

**முனைவர் என். சங்கீதா**
தமிழ் உதவிப்பேராசியர்

## பண்டைக்கால ஆய்வகம்

*இங்கிலாந்து நாட்டின் சாலிஸ்பரி சமவெளியில் பிரமாண்டமான கற்பாளங்கள் வட்டவடிவில் நடப்பட்டுள்ளன. கி.மு. 1900இல் இது உருவாக்கப்பட்டது என்று கருதப்படுகிறது.*

*இது சூரியனுக்குக் கட்டப்பட்ட கோயில் என மக்களால் நீண்ட காலமாக நம்மப்பட்டு வந்தது.*

*இங்குத் தலா 14 டன் எடையுள்ள 60 கற்பாளங்கள் வட்டமாக அமைந்துள்ளன.*

*1963ஆம் ஆண்டு அமெரிக்க விஞ்ஞானி ஹாக்கின்ஸ் அது கோவில் அல்ல ஆராய்ச்சிக் கூடம் என்று கண்டு அறிந்தார். சூரிய உதயம், அஸ்தமனம் பற்றித் துல்லியமாகக் கணக்கிடவும் சந்திரனின் இயக்கம், சந்திர, சூரிய கிரணங்களை அறியவும் அமைக்கப் பட்ட கண்ணி மூலம் சோதித்துப் பார்த்தலில் ஹாக்கின்ஸ் கூறியது உண்மை என உறுதியானது.*

**ஏ. கீர்த்தனா**

*இளங்கலை வேதியியல் மூன்றாமாண்டு*

## நட்பு

*"என் நட்பினை வானத்தோடு*
*ஒப்பிட முடியாது. அது*
*எட்டாத உயரத்தில் இருப்பதால்.*
*என் நட்பினை மலர்களோடு*
*ஒப்பிட முடியாது. அதுவும்*
*சில நேரத்தில் வாடி விடும்.*
*என் நட்பினைக்*
*கடலோடு ஒப்பிட முடியாது. அது*
*அறிந்து கொள்ள முடியாத*
*ஆழத்தில் இருப்பதால்.*
*எனவேதான்,*
*என் நட்பினை உன்னோடு*
*ஒப்பிடுகிறேன். அது எப்போதும்*
*உன் நெஞ்சோடு*
*இருக்கும் என்பதால்."*

**எஸ். தாரணி**

*இளங்கலை கணிணி அறிவியல்*
*இரண்டாமாண்டு இ பிரிவு*

## கவிஞருக்குச் சமர்ப்பணம்

*"தமிழ் என்னும் கடலிலே*
*இலக்கணம் என்னும் சிப்பியினுள்*
*சொல் என்னும் முத்தெடுத்து*
*கருத்து என்னும் மாலை தொடுத்து*
*கவிதை என்னும் வியாபாரத்திற்குச்*
*செல்லும் கலைஞன்தான் கவிஞன்."*

**முனைவர் என். சங்கீதா**

*தமிழ் உதவிப்பேராசியர்*

## தாயும் தாய்மையும்

*“வலிகொடுத்த எனக்கு*
*உயிர் கொடுத்தாய்.*
*சுமை கொடுத்த எனக்குச்*
*சுகம் கொடுத்தாய்.*

*சுவாசிக்கத் தெரியாத*
*எனக்காகச் சுவாசித்தாய்.*
*உன்னைத் தெரியாத*
*எனக்காக உண்டாய்.*
*பேசத் தெரியாத என்னைப்*
*புரிந்துகொண்டாய்.*

*எத்தனை எதிர்பார்ப்பகளுடன்*
*நான் உனக்குக் கிடைத்தேன்.*
*எந்தவித எதிர்பார்ப்பும்*
*இல்லாமல் நீ எனக்குக் கிடைத்தாய்.*
*உன் கலையாத அன்புக்கு*
*நிலையானதாக என்ன தருவேன்?*
*தெய்வத்திற்குக்* ***கடவுள்*** *என்ற*
*நான்கு எழுத்தில் பொருள்.*
*அம்மா உனக்குத்* ***தாய்*** *என்ற*
*இரண்டு எழுத்தில் பொருள்.*
*அம்மா!*
*கடவுள் இருக்கும் கருவறையைவிட*
*நான் இருந்த கருவறையை*
*மிகவும் நேசிக்கிறேன்.*

பா. ஹேமலதா
*இளங்கலை கணிதம் இரண்டாமாண்டு*
*ஆ பிரிவு*

## சாதி

*“இரவு பகலாகவும்*
*மொட்டுகள் பூக்களாகவும்*
*களிமண் பானையாகவும்*
*மாறிக்கொண்டே இருக்கின்றன.*

*காலங்களும்*
*சோலைகளும்*
*கவலைகளும்*
*மாறிக்கொண்டே இருக்கின்றன.*

*மனித சமுதாயமே!*
*நீ படைத்த சாதிமட்டும்*
*மாற்றம் இல்லாமல் இருக்கிறதே?*
*அன்று நான்கு சாதி*
*இன்று நாலாயிரம் சாதி*
*பிறப்பில் இரு சாதி.*

*ஒன்று ஆண்சாதி*
*மற்றொன்று பெண் சாதி.*

*இதை உணர்ந்து கொண்டு*
*மாற்றம் வந்தால்*
*ஒழியும் இந்தச் சாதி”*

சி.வ. காவியமதி
*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

# கோவில்தரும் எனர்ஜி

*(ஓர் அறிவியல் வழிப்பட்ட அலசல்)*

*இதைப்படிக்கத் தொடங்கும் முன் இது எல்லாக் கோவில் களுக்கும் பொருந்தாது என்பதை கவனத்தில் கொள்க. எல்லா லட்சணங்களும் கொண்டிருக்கும் கோயில்களுக்கு மட்டும்தான் இது பொருந்தும். பழங்காலத்துக் கோவில்களுக்கு இது நூறு சதவிகிதம் பெருந்தும்.*

*பூமியின் காந்த அலைகள் அதிகம் வீசப்படும் இடங்கள்தான் இந்தக் கோயில்களின் சரியான அமைவிடம். இது பொதுவாக ஊருக்கு ஒதுக்குப்புறமான இடங்களில் மற்றும் மலையை ஒட்டிய பகுதிகளில் இருக்கும்.*

*கோவில்களில் மிகுதியான காந்த சக்தியும் பாஸிடிவ் எனர்ஜியும் அதிகம் இருக்கும். இது நார்த் போல் சவுத் போல் திரஸ்ட் வகை ஆகும். முக்கிய சிலை இந்த மையப்பகுதியில் வைக்கப் பட்டிருக்கும். அதனைச் சுற்றியுள்ள பகுதியினை நாம் கருவறை அல்லது மூலஸ்தானம் எனக் குறிப்பிடுவோம். இந்த மூலஸ்தானம் இருக்கும் இடம்தான் அந்தச் சுற்று வட்டாரத்திலேயே அதிகம் காணப்படும் அந்தக் காந்த மற்றும் பாஸிடிவ் எனர்ஜி. பொதுவாக இந்த மூலஸ்தானம் சுயம்பாக உருவாகும் அல்லது அங்கே கிடைக்கப்பெறும் சிலையைக் கொண்டு, பின்னர் கோயில் உருவாக்கப்படும்.*

*பல கோவில்களின் கீழே அதுவும், இந்தக் கருவறையின் கீழே சில செப்புத் தகடுகள் பதிக்கப் பட்டிருக்கும் அது எதற்கு தெரியுமா? அதுதான் கீழே இருக்கும் எனர்ஜியை அப்படிப் பன்மடங்காக்கி வெளிக்கொண்டுவரும். அதுபோக எல்லா மூலஸ்தானமும் மூன்று புறமும் மூடி வாசல் மட்டும்தான் திறந்து இருக்கும் அளவுக்குக் கதவுகள் இருக்கும். இவை அந்த எனர்ஜியைப் பலதிசைகளிலும் செல்லவிடாமல் ஒரு வழியில் அதுவும் வாசலில் இடம் மற்றும் வலது புறத்தில் இருந்து இறைவனை வணங்கும் பக்தர்களுக்கு இந்த எனர்ஜி கிடைக்க வழிசெய்யும்.*

*இது உடனே தெரியாமல் இருக்கும் ஓர் எனர்ஜி. அடிக்கடி கோவிலுக்குச் செல்லும் ஆட்களுக்குத் தெரியும், ஒருவித எனர்ஜி அந்தக் கோவிலில் கிடைக்கும் என்று. அதுபோக கோவிலின் பிரகாரத்தை இடமிருந்து*

*வலமாய் வரும் காரணம் எனர்ஜியின் சுற்றுப்பாதை இதுதான் என்பதே.*

*அதனால்தான் மூலஸ்தானத்தைச் சுற்றும்போது அப்படியே நமது உடலில் அந்த எனர்ஜியும் வந்துசேரும். இந்தக் காந்த மற்றும் ஒருவித பாசிடிவ் மின்சார சக்தி நமது உடம்புக்கும் மனத்திற்கும் ஏன் மூளைக்கும் தேவையான ஒரு பாசிடிவ் காஸ்மிக் எனர்ஜி.*

*மூலஸ்தானத்தில் ஒரு விளக்கு, தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கும் அதுபோக அந்த விக்கிரகத்திற்குப் பின் ஒரு விளக்கு. அதை சுற்றி கண்ணாடி. அது செயற்கை ஒளி வட்டம் வருவதற்கு அல்ல அது அந்த எனர்ஜியை அப்படி பவுன்ஸ் செய்யும் ஒரு டெக்னிக்கல் செயல்தான். அதுபோக மந்திரம் சொல்லும்போதும் மணியடிக்கும்போதும் அங்கே செய்யப்படும் அபிஷேகம் அந்த எனர்ஜியை மென்மேலும் கூட்டி, ஒரு கலவையாய் வரும் மிகுதியான எனர்ஜி உற்பத்திக் கூடம்தான் இந்த மூலஸ்தானம்.*

*இவ்வளவு அபிஷேகம். கர்ப்பூர எரிப்பு, தொடர்விளக்கு எரிதல் இதை ஒரு 10-க்குப் 10 அறையில் நீங்கள் செய்துபாருங்கள். இரண்டே நாளில் அந்த இடத்தில் துர்நாற்றம் ஏற்பட்டுவிடும். ஆனால், கோவிலில் உள்ள இந்தக் கருவறை மட்டும் எத்தனை வருடம் பால், தயிர், பஞ்சாமிர்தம், தேன், சந்தனம், குங்குமம், விபூதி மற்றும் எண்ணெய் போன்றன கொண்டு அபிஷேகம் செய்தாலும் இந்த இடம் மணக்கவே செய்யும். அதுபோக அங்கு செய்யப்படும் சொர்ணாபிஷேகம் இந்த எனர்ஜியை ஒவ்வொரு நாளும் கூட்டிக்கொண்டே இருக்கும்.*

*பூக்கள், கர்ப்பூரம் (பென்ஸாயின் கெமிக்கல்), துளசி (புனித பேஸில்), குங்குமப் பூ (சே.ஃப்ரான்), கிராம்பு(கிளவ்) ஆகியவற்றோடு செம்பில் (காப்பர்) வைக்கப்பட்டுக் கொடுக்கப்படும் தீர்த்தம் மிகுதியான சுவையுடைய, உடலுக்கு நலம்தரும் மருந்தே ஆகும். இதனைப் பருகும்போது வாய் துர்நாற்றம், பல்வலி போன்றன நீக்கப்படுகின்றன. இரத்தம் தூய்மையடைகின்றது.*

*கோவிலின் கருவறையைத் தீபாராதனையின்போதுதான் திறப் பார்கள். அல்லது திரையினை நீக்குவார்கள். காரணம் இந்த எனர்ஜி முழுமையாகப் பக்தர் களுக்குச் சென்றடைய வேண்டும் என்பதே.*

சில கோவில்களில் ஆண்கள் மேற்சட்டை அணிந்து நுழைவதனைத் தடைசெய்துள்ளனர். காரணம் அவர்களுக்கு வெற்றுடம்பில் அந்த எனர்ஜி அதிகஅளவில் ஊடுருவ வேண்டும் என்பதே.

திருமணமான பெண்கள் கோவிலுக்குள் நுழைந்ததும் தங்களின் தாலியைச் சேலைக்குமேல் தெரியுமாறு செய்துகொள்வர். இது கணவருக்காக அல்ல. தங்களுக்காகத்தான். தங்கம் அந்த எனர்ஜியை அதிக அளவில் ஈர்த்து அவர்களின் உடல்நலத்தைப் பாதுகாக்க உதவும்.

கோவிலின் கர்ப்பகிரகத்திற்கும் கோவில் கொடிமரத்திற்கும் ஒரு தொடர்பு உண்டு.

கோவில்மேல் உள்ள கலசம் சில சமயம் இரிடியமாக மாற இதுதான் காரணம். கீழிருந்து புறப்படும் காந்த அலை மற்றும் இடியின் தாக்கம் தான் ஒரு சாதாரண செப்புக் கலசத்தையும் இரிடியமாக மாற்றும் திறன் படைத்தது.

அதுபோக கோவிலை இடி தாக்கும் அபாயத்திலிருந்து காக்கும் இடி கடத்தியாகச் (மின்கடத்தி) செயல் படுகின்றது. இதுதான் பிற்காலத்தில் கண்டெடுக்கப்பட்ட லைட்னிங் அரெஸ்டர்ஸ்.

கோவில் கதவு என்றுமே மரத்தல் செய்யப்படுகிறது. அதில் மணிகள் மாட்டப்பட்டிருக்கும். அல்லது இரும்பு குமிழ்கள் பதிக்கப் பட்டிருக்கும். காரணம் இடியின் ஹைவோல்டேஜ்யை நியூட்ரல் செய்யவே. இடியிறங்கினால் கோவில் கதவுகளில் உள்ள மணிகள் அதிர்ந்து ஒலியை ஏற்படுத்தும்.

மனநலம் பாதிக்கப் பட்டவர் களைக் கோவிலுக்கு அழைத்து வருவதும் அவர்களைக் கோவில் வளாகத்தில் இருக்கச்செய்வதும் அவர்களுக்கு இந்த எனர்ஜியை ஊட்டுவதற்காகவேதான்.

கோயில் மடப்பள்ளியில் தயாரிக்கப்படும் பிரசாதப்பொருள்கள் அனைத்திலும் இந்த எனர்ஜி கலந்திருக்கும்.

**த. பழனிவேல்**
*முதுகலைக் கணிப் பயன்பாட்டியல் மூன்றாமாண்டு*

## மரம் வளர்ப்போம்

*“நெற்பயிர் விளையும் இடத்தில்*
*நீண்ட அடுக்குமாடி குடியிருப்பு.*
*மூச்சுவிட முடியாத அளவிற்கு*
*வாகனங்கள் விடும் புகைமண்டலம்.*
*வழி மீது விழிவைத்து எதிர்பார்த்தாலும்*
*பொழியாத மழைத்துளிகள்*
*பசுமையாக இருக்கவேண்டிய இடங்கள்*
*பாலைவனமாக இருக்கும் காட்சி.*
*இப்படியே போனால் தாங்குமா பூமி?*
*வெப்பமாகி விடுமே விரைவில்.*
*இந்த நிலை நீடித்தால்*
*விலை கொடுத்து வாங்க வேண்டும்*
*சுவாசக் காற்றை எனவே,*
*வாகன புகையைக் குறைப்போம்*
*மரம் வளர்த்தலை அதிகரிப்போம்.*
*அதனால் அதிக மழைநீர் பெறுவோம்*
*பசுமையான பாரதம் மலர*
*அதிக மரம் வளர்ப்போம்*
*மனித சுவாசம் காப்போம்”*

**த. கவின்குமார்**
*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

## தன்னம்பிக்கை

*“என் வாழ்க்கை என்னும்*
*வானத்தில்*
*வானவில்கள் வந்ததில்லை.*
*வந்துபோன மேகம்*
*மழைத்துளிகள் தந்ததில்லை.*
*கடந்த காலக் காயங்கள்*
*நெஞ்சில் நீங்கவில்லை.*
*அதை நினைத்து நினைத்து*
*மனதும் உறங்கவில்லை.*
*நான் ஓய்ந்து போகும் வரை*
*ஓயாமல் துயரங்கள் என்னை*
*விடுவதில்லை - எனக்கு மட்டும்*
*ஏன் இப்படி எனத் தெரியவில்லை.*
*இன்னும் இந்த உலகை நான்*
*அறியவில்லை.*
*இத்தனை இருந்தும் நான்*
*அழுவதில்லை.*
*சாதிப்பேன் என்ற நம்பிக்கையில்*
*நான் இன்னும் சாகவில்லை”*

**கே.எம். நந்தினி**
*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

## மழையின் நிறம்

*“இடிக்கும் மின்னலுக்கும் இடையே*
*பிறந்த முத்து மழையே.*
*கண்ணிமைக்கும் நேரத்தில்*
*பூமிக்கு வந்து பூமித்தாயைச்*
*செழிப்பாக்குகின்றாய்.*

*உன் அழுகையால்தான்*
*பூமியில் உள்ள*
*மண்ணும் மனிதனும் சிரிக்கின்றனர்.*

*ஏழை எளிய மக்களின்*
*வாழ்வில் ஒளி வீசுகிறது.*

*உந்தன் வருகையைக் கண்டு*

*சின்னஞ்சிறு குழந்தை உள்ளங்கள்*
*உற்சாக மகிழ்ச்சியில் நனைகின்றன.*
*சிறுசிறு தாவரங்கள்*
*மண்ணில் தலையெடுக்கின்றன.*

*சிட்டுக் குருவிகள்*
*மழலையிசை பாடுகின்றன.*
*பட்டுப்போன மரங்கள் கூடப்*
*பச்சை மரங்களாகிப்*
*பூக்களையும் கனிகளையும்*
*சுமக்கின்றன.*

*குளம், குட்டை, கிணறு*
*போன்ற நீருற்றுகள் நிரம்பி வழிந்து*
*தன் மகிழ்ச்சியை*
*வெளிப்படுத்துகின்றன.*

*தரிசு நிலங்கள் கூட*
*விளைநிலங்கள் ஆகின்றன.*
*உன் குளுமையில் குறிஞ்சி மலர்கள்*
*தங்கள் அழகிய முகங்களை*
*விரித்துப் புன்னகைக்கின்றன.*

*இத்தகைய அதிசயம் செய்யும்*
*மழையே உன்*
*நிறம் தான் என்ன?"*

செ. ராஜேஸ்வரி
*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

# தன்னம்பிக்கை

*"தன் வாழ்நாள் முழுவதும்*
*நம்முடன் வந்து செல்வது*
*நம் நிழல் அதுபோல*
*நம் வாழ்வில் மற்றவர்*
*கூறும் நம்பிக்கையை விட*
*நாம் கொள்ளும் தன்னம்பிக்கையே*
*நம்மை வாழ்வில்*
*முன்னேறச் செய்யும்.*
*அதுதான்*
*ஏழை எளிய மக்களின்*
*வாழ்க்கைக்கான தீபம்*
*நாம் ஒரு தீபத்தை ஏற்றி வைக்கும்*
*போது அது நன்கு தெரியும்.*
*சிறிது நேரம் கழித்து*
*காற்று வீசும்போது*
*அது அங்கும் இங்கும்*
*அசைந்தாடும். இருப்பினும்*
*அதுதான் தன்னம்பிக்கை எனும்*
*திரியில் தீபமாகத் திகழ்கின்றது."*

***சி. புனிதா***
*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

# அன்பைத்தேடி

*"மனிதனே அன்பைத் தேடித்தேடி*
*தேய்ந்து கொண்டிருக்கிறாய்!*
*தேடுதலில் அன்பு தென்படாத பொழுது*
*சோர்வு என்ற தீயில் விழுந்து விடாதே.*
*விண்ணில் வானவில் தோன்றினால்*
*பல வண்ணங்கள் தோன்றும்.*
*உன்னில் வேதனைகள் தோன்றினால்*
*அன்பென்ற பல*
*எண்ணங்கள் தோன்றும்.*
*முகில்கள் மூடிவிட்டால் வானம்*
*இல்லையென்று ஆகிவிடாதே!*
*எனில் புவிஎன்ற*
*உருண்டை உலகத்தில்*
*உன் விழிகளைத் திறந்து நீ*
*கடப்பதற்கான வழிகளைத் தேடு.*
*அந்த வழிகளைத்தேடி உன்*
*அன்பென்ற விலாசத்தை நாடு."*

**வி. மேனகப்பிரியா**
*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

# அன்பு

*"அன்பு என்பது*
*கனவுகளை வளர்க்க*
*கவலைகளை மறக்க*
*சுகங்களை ரசிக்க*
*சோகங்களை விலக்க*
*அன்பு காற்றும்*
*அலையும் போல ஓய்வதில்லை*
*நட்பும் அன்பும்*
*நம் உயிர் மூச்சாய்த் தொடரட்டும்*
*இந்த அன்பு நேசத்தின் மொழியை*
*நினைவினிக்க நெஞ்சினிக்க பேசும்*
*கண்ணை விட்டு வெளியேறும்*
*கண்ணீர் அல்ல அன்பு*
*நம் கண்களின் இருவிழியாய்*
*இருப்பதே அன்பு"*

**எஸ். அனுஷா பாரதி**
*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

# தீய பழக்கங்கள்

*அன்பையும் பண்பையும்*
*அறிய வைத்தாய்.*
*ஆசையும் அறிவையும்*
*அளவாய்த் தந்தாய்.*
*இரவையும் பகலையும்*
*அறிய வைத்தாய்.*
*இன்பமும் துன்பமும்*
*எதிரே தந்தாய்.*
*வாழ்க்கையின் பாதையாய்*
*நேரே வைத்தாய்*
*உண்மையின் நிலையை*
*உணர வைத்தாய்.*
*அழகிய வாழ்க்கையை*
*அமைய வைத்தாய்.*
*இந்தப் பூமியில் என்னைப்*
*பிறக்க வைத்தாய்.*
*நானோ நல்லவர்*
*நட்பை விட்டுவிட்டேன் -*
*தீயவர் நட்பில் விழுந்து விட்டேன்.*
*தந்தையின் அறிவுரை கிடைத்தது*
*தாயின் அரவணைப்பு கிடைத்தது*

*தங்கையின் பாசம் கிடைத்தது*
*நண்பனின் நேசம் கிடைத்தது*
*வாழ்க்கையின் பாதை*
*புதிதாகத் தெரிந்தது"*

**ஆ. செல்வி**

*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

## கண்ணீர்

*"ஏழையின் முகத்தில் இறைவனைக்*
*காண் என்று கூறயுள்ளனர்.*
*ஆனால் இறைவன் என்ற*
*நான்கெழுத்தையா பார்க்கிறோம்?*
*வறுமை என்ற மூன்றெழுத்தைத்தானே!*
*சொல்லுவதற்கு*
*மூன்றெழுத்து எளிதுதான்*
*ஒவ்வொரு எழுத்தும்*
*ஒருவித பொருளைத் தருகின்றது.*
*ஒவ்வொரு குழந்தையின் கண்களிலும்*
*ஒரு வகையான இனம்புரியாத*
*மகிழ்வு தெரியும். ஆனால்*
*வறுமை என்னும்*
*மூன்றெழுத்தில் சிக்குண்ட*
*குழந்தையின் கண்களில் தெரிவது*
*நான்கெழுத்து - அதுதான்*
*கண்ணீர்*

**என். நந்தினி**

*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

## அம்மா

*"அ என்னும் எழுத்தை*
*அம்மா என்னும் சொல்லில்*
*இருந்து எடுத்ததால் என்னவோ*
*அது தமிழ் எழுத்துகளுள்*
*முதன்மையாக உள்ளது.*
*அன்பு என்றால் உடனே*
*நாம் சொல்லும் சொல்*
*அம்மாதான்.*
*மனிதர்களுள் இருட்டை*
*விரும்புபவர்கள் யாருமில்லை.*
*அவர்கள் கூட*
*விரும்புவார்கள் இருட்டான*
*தன் தாயின் கருவறையை."*

**அ.மா. திவ்யா**

*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

## வறுமை

*"வறுமையின் நிறம் சிவப்பு அது*
*சிவப்பு மனிதனுக்கும் உண்டு*
*கருப்பு மனிதனும் உண்டு*
*கருவில் உள்ள குழந்தை*
*வறுமையைச் சந்திக்க*
*வேண்டாமென்றால் மனிதா*
*உழைத்திடு - நாளைய*
*சந்ததியையாவது*
*வறுமையில்லாமல் வாழ வழிவகு"*

**சு. தமிழ் செல்வி**

*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

*சிறுகதை*

# அன்பு

டி. கீதாஞ்சலி

*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

*ஒரு காட்டில் கொடூரமான கொள்ளைக்காரன் வாழ்ந்துவந்தான். அவன் பெயர் மலையாண்டி. மலையாண்டி என்ற பெயரைக் கேட்டாலே அழும் குழந்தைகள் கூட அழுகையை நிறுத்திவிடும். மக்கள் மட்டுமின்றி மற்றக் கொள்ளைக் கூட்டத்தினரும் மலையாண்டியைக் கண்டு நடுங்கினர்.*

*ஒருநாள் மலையாண்டியின் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன் குதிரை மீது ஏறி விரைந்துவந்து கொண்டிருந்தான். அவன் வழியிலிருந்த கிராமத்துக்குள் புகுந்து வேகமாகக் குதிரையைச் செலுத்தினான்.*

*அதைக்கண்ட மக்கள் பயத்தால் ஓடி ஒளிந்து கொண்டனர். அவன் அந்த ஊர் கோயில் பூசாரியின் வீட்டுக்குச் சென்று குதிரையை நிறுத்தினான். பின்னர் பூசாரியின் வீட்டுக்குள் நுழைந்து யார் உள்ளே? என்று உரத்த குரலில் கேட்டான்.*

*குரல் கேட்டு அதிர்ச்சியடைந்த பூசாரியின் மனைவி அலமேலு யார் வேண்டும்? என்று வீட்டுக்குள்ளே இருந்துகொண்டே கேட்டாள். மலையாண்டியின் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவன் வந்திருக் கிறேன் என்று அவன் பதிலளித் தான்.*

*மலையாண்டி என்ற பெயரைக் கேட்ட உடனே அலமேலுக்குக் கை, கால்கள் எல்லாம் உதறத் தொடங்கின. ஆனால், அதை வெளியே காட்டாமல் அவள் அறையில் இருந்து வெளியே வந்தாள்.*

*என்னப்பா வேண்டும்? நாங்க பரம ஏழைகள் ஆயிற்றே. எங்களிடம் என்ன கொள்ளை யடிக்கப் போகிறாய்? என்று சற்று பயத்துடன் கேட்டாள்.*

*நாங்கள் உன்னிடம் எதையும் கொள்ளையடிக்க வரவில்லை. உன் கணவன் பூசாரியாக இருக்கும் கோயிலில் உள்ள நகைகளைக் கொள்ளை அடிக்கப்போகிறோம். இன்றைக்கு அல்ல. நாளைக்குத் தான். அதனால் முன்கூட்டியே உன் கணவரிடம் சொல்லிவிட்டு வருமாறு*

*என் தலைவன் மலையாண்டி சொல்லியிருக்கிறார்.*

*அப்படி நாங்கள் நகைகளைத் திருடும் போது உன் கணவன் குறுக்கிடக்கூடாது என்று கொள்ளைக் காரன் சொன்னபோது அவளுக்குத் தலை சுற்றியது.*

*ஐயா அந்தக் கோயிலில் மட்டும் கொள்ளையடிக்க வேண்டாம். பின்னர் என் கணவன் உயிருடன் வாழமாட்டார். கொள்ளையடிக்கும் முடிவை மாற்றிக் கொள்ளுங்கள், என்று அலமேலு கெஞ்சினாள்.*

*தலைவன் சொன்னா சொன்னது தான். அவன் முடிவை மாற்ற அவனாலேயே முடியாது என்று திட்டவட்டமாகக் கூறினான். அலமேலு குழம்பினாள்.*

*கோயில் நகைகள் கொள்ளை யடிக்கப்பட்டால் தன் கணவர் இறந்துவிடுவார் என்ற பயமும் இருந்தது. மலையாண்டியை என்ன செய்வது? கோயில் கொள்ளைத் திட்டத்தை எப்படித் தடுப்பது என்று புரியாமல் தவித்தாள்.*

*தன் கணவரிடம் அவள் வீட்டில் நடந்ததைக் கூறாமல் நாளை நம் வீட்டில் ஒரு விருந்து ஒன்று ஏற்பாடு செய்கிறேன். அதில் நீங்கள்தான் சமைக்க வேண்டும் என்று கேட்டாள். அலமேலுவும் கணவனும் சந்தைக்குச் சென்று விருந்திற்கு வேண்டிய காய், கறிகளையும் மற்ற அனைத்தையும் வாங்கினர்.*

*அடுத்தநாள் காலையில் இருவரும் இணைந்து அறுசுவை உணவினைத் தயாரித்தனர். அறுசுவை உணவின் மனம் வீடு முழுவதும் பரவியிருந்தது.*

*மனைவி கணவனிடம் தான் கோயிலுக்குச் செல்வதாகக் கூறிவிட்டுக் கணவனை இங்கேயே இருங்கள் என்று கூறினாள். தனக்குத் தன்னம்பிக்கையைத் தருமாறு கடவுளிடம் வேண்டினாள்.*

*குதிரையில் மலையாண்டி வருவதைப் பார்த்தாள். அவரிடம் சென்று அண்ணா தன் வீட்டிற்கு வந்து விருந்து உண்ண வாருங்கள் என்று கூறினாள்.*

*மலையாண்டி அதிர்ந்தான். தன்னை யாருமே இப்படிக் கூறிய தில்லையே என்று அவனும் கொள்ளைக்கூட்டமும் அவள் வீட்டிற்குச் சென்றனர்.*

அதைப் பார்த்ததும் மக்கள் அதிர்ந்தனர். வீட்டிற்குச் சென்றதும் கணவனும் பயந்தான். அவர்கள் இருவரும் மலையாண்டிக்கும் கொள்ளைக் கூட்டத்திற்கும் விருந்து பரிமாறினர்.

மலையாண்டிக்கு அதில் விஷம் இருக்குமோ என்ற அச்சம் இருந்தது.

உடனே அவர்கள் சந்தேகப் படுவதைப் பார்த்த அலமேலு அண்ணனுக்குத் தங்கை விஷம் கொடுக்கமாட்டாள். நீங்க வேணும்னா சோதித்துப் பாருங்கள் என்றாள்.

அவனும் வெளியில் இருந்த நாயிக்குக் கொண்டுபோய் போட்டான். நாயிக்கு எதுவும் நேரவில்லை.

மலையாண்டியும் அவனது கொள்ளைக் கூட்டமும் வயிறு நிறைய உண்டு மகிழ்ந்தனர். அவள் வாங்க அண்ணா நகையை நான் எடுத்துத் தருகிறேன் என்றாள்.

வேண்டாம் தங்கச்சி. இதுவரை மனித பாசம் அறியாமல் காட்டுமிராண்டியாக வாழ்ந்து விட்டேன். உன் அன்பும் பாசமும் என்னை மனிதனாக்கிவிட்டது. அன்பை விட இந்தப் பணம், நகை எதுவும் முக்கியமில்லை என்பதை என்று எனக்குப் புரியவைத்து விட்டாய் என்று கூறினான் மலையாண்டி.

## அலையின் செய்தி

“எத்தனை ஆசைகளுடன்
ஓடிவருகிறது இந்த அலை.
அதைத் தடுத்து விடுகிறதே
இந்தக் கடற்கரை.
என்ன சொல்ல வருகிறது
இந்த அலை?
நான் நினைக்கிறேன்
ஒரு பேரிழப்பு வருகிறது என்று
சொல்ல வருகின்றது.
தீமைகள் வேண்டாம்
தீவினைகள் வேண்டாம்
சுனாமி வருவதாய் சொல்ல
வருகிறது இந்த அலை.

**பா. ஹேமலதா**

இளங்கலை கணிதம் இரண்டாமாண்டு
ஆ பிரிவு

**இவ் இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துகளையும் அறிவுரைகளையும் எங்களுக்குத் தெரிவித்துதவவும்** -ஆசிரியர்

# அன்பு

*"வானில் உள்ள நிலவுக்கும்*
*ஒருநாள் விடுமுறை உண்டு*
*ஆனால், என்னில் உள்ள*
*உன் நினைவுக்கு*
*என்றும் விடுமுறை என்பதே இல்லை*
*பார்க்கும் போது கண்களில்*
*வரும் சந்தோஷத்தை விட*
*பிரியும் போது வரும்*
*இரண்டு துளி கண்ணீர்*
*உண்மையான அன்பை*
*வெளிப்படுத்தும்*
*பூ உதிர்வது*
*காம்பின் மீது கொண்ட*
*கோபம் இல்லை -*
*மண்ணின் மீது*
*கொண்ட அன்பு"*


வே. ரம்யா

*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*


***சிறுகதை***

# மரம்


மு. மாரூபா

*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*


*அன்று ஞாயிற்றுக்கிழமை. பள்ளிவிடுமுறை. மதன் தன் தோழர் களுடன் தோட்டத்திற்கு மட்டைப்பந்து விளையாடச் சென்றான். அவர்கள் மைதானத்தை உருவாக்ககளைச் செடிகளையும் நட்டு வைத்த சில மரங்களையும் பிடுங்கி, வெட்டி எறிந்தனர். மாலைப் பொழுது வரை மதன் விளையாடினான். பின்பு அனைவரும் அவரவர் வீட்டிற்குச் சென்றுவிட்டனர்.*

*மதன் தன் அம்மா கமலாவிடம் தான் தோட்டத்திற்கு விளையாடச் சென்றதையும் களைச் செடிகளையும் மரக்கன்றுகளையும் பிடுங்கி, வெட்டிய யதனைக் கூறினான். கமலா மதனைப் பார்த்து 'மரங்களை வளர்க்க வேண்டும்' என்று அறிவுரை கூறினாள். மதன் உண்டுவிட்டுத் தூங்கச்சென்றான்.*

*காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங் கள்! என்று யாரோ அழைக்கும் குரல்கேட்டு விழித்த, மதன் வெளியேவந்தான். யாரும் இல்லை. யார் அவ்வாறு அழைத்தது என்று குழம்பியவாறே நடந்தான். பின்பு வீட்டிற்கு வந்து தூங்கினான். அவன் தூக்கத்தில் ஒரு கனவு வந்தது.*

*அவன் வீட்டுத்தோட்டத்தில் அவன் உலவினான். அங்கு ஒரு மரம் அவனைத் தன்னருகில் அழைத்தது.*

*மரம் தன்னை அழைக்கிறதே என்று வியந்தான். மரம் அவனிடம் பேசியது. இச்சோலை முன்பு எப்படி வளம்மிக்கதாக இருந்து என்பது பற்றியும் இப்போது எப்படி வளமிழந்து விட்டது என்பது குறித்து விரிவாக எடுத்துக்கூறியது.*

*அதற்கான காரணங்களாக விளைநிலங்களை வீட்டடி மனைகளாக மாற்றியமை, எளிதில் மக்காத பிளாஸ்டிக் பொருட்களை அதிக அளவில் பயன்படுத்தியமை போன்ற வற்றைச் சுட்டிக்காட்டியது. மரம் தன் நிலையினைக் கூறி அழுதது.*

*மதன் கண் கலங்கினான். விழித்தான். தான் கண்டவை கனவு என்பதனை அவன் மனம் ஏற்கவில்லை.*

*தன் கனவு குறித்துத் தன் தாயிடம் கூறினான். அவனும் அவன் தாயும் சேர்ந்து வீட்டருகிலும் பள்ளிக்கூடத்தின் அருகிலும் பொது இடங்களிலும் மரம் வளர்க்கத் தொடங்கினர். ஏற்கனவே உள்ள மரங்களைப் பாதுகாக்கத் தொடங்கினர்.*

*கனவில் கண்ட மரத்தின் கவலையை நிஜத்தில் போக்கினான் மதன்.*

## இனி ஒலிக்காத குரல்

*சௌராட்டிரக் குடும்பத்தில் மதுரையில் மீனாட்சி ஐயங்கார் என்பவரின் இரண்டாவது மகனாக டி.எம். சௌந்தரராஜன் பிறந்தார்.*

*வித்துவான் பூச்சி சீனிவாச ஐயங்காரின் மருமகன். காரைக்குடி ராஜாமணி ஐயங்காரிடம் முறையாக இசைப் பயிற்சி பெற்று திரையுலகில் நுழைந்தார். பல ஆண்டுகளாகக் கச்சேரி செய்து வந்த இவரை சுந்தரராவ் நட்கர்னி என்பவர் தனது கிருஷ்ண விஜயம் (1950) திரைப்படத்தில் "ராதே நீ என்னை விட்டுப் போகாதேடி" என்ற பாடலைப் பாடுவதற்கு ஒப்பந்தம் செய்தார்.*

*அதைத் தொடர்ந்து மந்திரி குமாரி, தேவகி, சர்வாதிகாரி போன்ற படங்களில் பாடுவதற்கு வாய்ப்புக் கிடைத்தது. தேவகி படத்தில் அவர் பாடி நடித்திருந்தார்.*

*இவர் "சிவாஜி, எம்.ஜி.ஆர், ஜெமினி, ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், முத்துராமன், எஸ். எஸ். ராஜேந்திரன் மற்றும் நாகேஷ்*

*உட்பட பல முன்னணி திரைப்பட நடிகர்கள் ஒவ்வொருவருக்கும் பொறுத்தமான, தனித் தனி குரலில் பாடி, அந்த நடிகர்களின் முகத்தைத் தனது குரலின் மூலம் ரசிகர்களின் மனக்கண்ணில் நிலை நிறுத்தும் ஆற்றல் இவருக்கு மட்டுமே உண்டு" என்று தமிழக மக்கள் இவரை புகழ்ந்து வருகின்றனர்.*

*வீரம், காதல், சோகம், துள்ளல், தத்துவம், நையாண்டி மற்றும் கிராமிய மணம் கமழும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களையும், 2500-க்கு மேற்பட்ட பக்திப் பாடல்களையும் பாடியுள்ளார். இன்றைய முன்னணி திரைப்பட நட்சத்திரங்களான ரஜினிகாந்த் மற்றும் கமல்ஹாசன் ஆகியவர்களுக்கும் பாடியுள்ளார்.*



*அதுமட்டுமல்ல, தொடர்ந்து ஆறு தலைமுறைத் திரைத்துறை நடிகர்களுக்குப் பின்னணிப் பாடகராக இருந்துள்ளார்.*

*இவர் பட்டினத்தார் திரைப் படத்தில் முக்கிய கதாபாத்திரமான பட்டினத்தாராக நடித்துள்ளார். மேலும் அருணகிரிநாதர் திரைப் படத்திலும் கதாநாயகனாக நடித்து, முருகக் கடவுள் மீது இவர் பாடிய "முத்தைத் திருபத்தித் திருநகை" எனும் பாடல் முருக பக்தர்களால் இன்றளவும் மறக்க முடியாதது.*

*இவர் பத்மஸ்ரீ, கலைமாமணி முதலான பல விருதுகளைப் பெற்றுள்ளார்.*

*2010ஆம் ஆண்டு கோவையில் நடந்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்காக உருவான "செம் மொழியான தமிழ்மொழியாம்" என்ற பாடலே இவர் பாடிய இறுதிப் பாடலாகும்.*

*இதயக் கோளாறு காரணமாகச் சென்னையில் சிகிச்சை பெற்று வந்த இவர் 25.05.2013 ஆம் நாள் மாலை 3.50 மணிக்குக் காலமானார்.* இவருடைய வலைத்தளம்:

http://www.tmsounderarajan.org/

*குறுங்கதை:*

# ஒட்டகத்தின் கழுத்து

*'ஒருவன் சோம்லுடன் இருந்தா னானால் அவனுக்கு வாழ்க்கையே இல்லை' எனறு கூறிய குருவிடம், சீடன், 'சோம்பல் அவ்வளவு கொடுமையானதா?' என்று வினவினான். அதற்கு குரு, 'ஒட்டகத்தின் நிலைதான் மனிதனுக்கும்' என்றார்.*

*ஒட்டகம் ஒன்று காட்டில் கடுந்தவம் செய்தது. அதன் தவத்தைப் பாராட்டிய பிரம்மன் நேரில் தோன்றி, 'வேண்டும் வரத்தைக் கேள்' என்றார். "நான்முகனே காட்டில் உணவுக் காக அலைந்து திரிவது வேதனையைத் தருகிறது. இருந்த இடத்திலேயே உணவைப்பெற விரும்புகிறேன். என் கழுத்து நூறுமைல் நீளம் உள்ளதாக இருந்தால் நல்லது" என்று வேண்டியது ஒட்டகம்.*

*கேட்டவரம் கிடைத்தது. கழுத்து நீளமாக நீண்டு வளர்ந்தது. அன்று முதல் அந்த ஒட்டகம் இருந்த இடத்திலிருந்து ஓரடியும் நகராமல் தூரத்தில் இருந்த தழைகளை ஒடித்துத் தின்று வந்தது. கார்காலம் வந்தது. காற்றும் மழையும் கலந்து திரண்டன. நீரில் நனைந்து, குளிரில் வாடிய ஒட்டகம் குகை இருக்கும் இடம் தேடி ஓடியது. நூறுமைல் நீளமுள்ள கழுத்துடன் எந்தக் குகையிலும் ஒட்டகத்தால் ஒதுங்க முடியவில்லை.*

*தன் தலையை மட்டும் ஒரு குகையில் நுழைத்து, உடல் முழுவதும் மழையில் நனைய, வாட்டும் குளிரில் வருந்தியபடி ஒட்டகம் நின்று கொண்டிருந்தது. மழைக்கு அஞ்சிய நரியொன்று, தன் துணையுடன் அந்தக் குகைக்குள் முன்பே பதுங்கியிருந்தது.*

*பசியால் வாடிய நரியின் பார்வையில் ஒட்டகத்தின் கழுத்து தெரிந்தது. மகிழ்ச்சியுற்ற நரி ஒட்டகத்தின் கழுத்தைக் கவ்வி இழுத்ததுக் கடித்துத் தின்றது. கழுத்தைச் சுருக்க முடியாத சோம்பேறி ஒட்டகம் இறுதியில் இறந்தது.*

*'செயல்படுவதற்குச் சோம்ப லுற்றால் வாழ்க்கை இல்லை' என்பது "ஒட்டகத்தின் கழுத்து"க் கதை யிலிருந்து சீடனுக்குப் புரிந்தது.*

***முனைவர் து. சரஸ்வதி,***
*தமிழ் உதவிப்பேராசிரியர்*

# மூன்று எதிர்ப்புகள்

## 01. ரௌலட் சட்டம் எதிர்ப்பு

*இந்தியாவில் தொடங்கிய புரட்சிகர இயக்கங்களை அழித் தொழிப்பதற்காக பிரிட்டிஷ் அரசு, நீதிபதி ரௌலட் என்பவர் தலைமையில் ஒரு கமிஷனை அமைத்தது.*

*1918ஆம் ஆண்டு அந்த கமிஷன் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தது. அச்சட்டத்தின்படி பிரிட்டிஷார் இந்தியர் களைக் கைதுசெய்யலாம். அக்கைதுக் கான காரணத்தை அவர்களிடம் கூறவேண்டியதில்லை. சிறையில் அடைத்து விசாரிக்கலாம், சித்திரவதை செய்யலாம். யாரும் கேள்விகேட்க முடியாது. நோ பெயில் - ஒன்லி ஜெயில். இச்சட்டம் ரௌலட் குழுவினரால் இயற்றப்பட்டதால் இதனை "ரௌலட் சட்டம்" என்று குறிப்பிட்டனர். தற்காலத்தில் உள்ள தடா, பொடா போன்ற பெரிய சட்டங்களுக்குகெல்லாம் ரௌலட் சட்டம்தான் தாய்.*

*இச்சட்டம் 10.03.1919 ஆம்நாள் நடைமுறைக்கு வந்தது. அதனை எதிர்த்து இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் மக்கள் கிளர்ச்சி செய்தனர். 06.04.1919ஆம் நாள் இச்சட்டத்திற்கு அகில இந்திய அளவில் எதிர்ப்பு தெரிவிக்கப் பட்டது. 10.04.1919ஆம் நாள் முதன்மையான இந்தியத் தலைவர் கள் கைதுசெய்யப்பட்டனர். அதனை எதிர்த்து இந்தியாவின் பல இடங்களில் கண்டனப் பொதுக் கூட்டங்கள், கிளர்ச்சிகள், கலவரங் கள் நடைபெற்றன.*

*அவற்றைக் கலைக்க, தடுக்க, ஒடுக்கக் காவல்துறை தடியடி, துப்பாக்கிச்சூடு போன்றன நடத்தப் பெற்றன. இதுதொடர்பாகப் பஞ்சாப்பிலுள்ள அமிர்தசரஸ் நகரில் நடந்த துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து பல இடங்களிலும் கலவரம் வெடித்தது. அமிர்தசரஸ் நகரில் அமைதியை நிலைநாட்டும் பொறுப்பு பிரிகேடியர் ஜெனரல் ரெஜினால்ட் டயர் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது.*

*ஜெனரல் டையர் என்ற பிரிட்டிஷ் அதிகாரி 12.04.1919 ஆம் நாள் ஓர் உத்தரவிட்டார். அவ் உத்தரவின்படி, பஞ்சாபில் எந்தப் பொதுக் கூட்டமும் நடத்தக் கூடாது, மக்கள் எங்கும் கூடக் கூடாது அறிவுறுத்தப்பட்டனர். குடிதண்ணீர்,*

*மின்சாரம் ஆகியன நிறுத்தப்பட்டன. நகரம் இருளில் மூழ்கியது. மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதித்தது.*

*அது பண்டிகைக்காலம். 13.04.1919 ஆம் நாள் 'பைசாகி' என்ற சீக்கிய புத்தாண்டு தினமாகும். அன்றுதான் குருகோவிந்த் சிங் கால்ஸா (சீக்கிய அறப்படை) இயக்கத்துக்கு அடிக்கல் நாட்டிய தினமாகும். இந்நாள் அமிர்தசரஸ் நகரில் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. அன்றே அறுவடைத் திருநாளும் கொண்டாடப் படுகின்றது.*

*அன்று பிற்பகலில் அமிர்தசரஸ் பொற்கோவிலுக்கு அருகில் உள்ள ஜாலியன் வாலாபாக் மைதானத்தில் கண்டனக் கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. அந்த மைதானம் நான்கு புறமும் மதிற்சுவரும், ஒரு குறுகிய வழியும் கொண்ட திறந்தவெளியையும் கொண்டது. பெண்களும், குழந்தைகளும், இளைஞர் களும் பெரும் எண்ணிக் கையில் கலந்து கொண்ட இக்கூட்டம் அமைதியான முறையில் நடந்து கொண்டிருந்தது.*

*திடீரென ஜெனரல் டயர் தலைமையில் பிரிட்டிஷ்படை உள்ளே நுழைந்து சுட்டனர். 150 படைவீரர்கள். அவர்களுள் 100 பேர் பிரிட்டிஷ் சிப்பாய்கள். 50 பேர் இந்தியச் சிப்பாய்கள். 90 துப்பாக்கிகள் 10 நிமிடங்களில் 1650 ரவுண்டுகள் சுட்டன. அப்படையினர் கொண்டுவந்த அனைத்து குண்டுகளும் தீர்ந்தன. 1700பேர் இறந்தனர், அவர்களுள் 120பேர் தப்பிக்க நினைத்து அம் மைதானத்தில் இருந்த கிணற்றில் குதித்து இறந்தனர். 3000 பேர் படுகாயமடைந்தனர்.*

*மைதானத்திற்குரிய நுழைவுவழி மிகச்சிறிது என்பதால் ஜெனரல் ரெஜினால்ட் டயர் தனது சிறப்புத் தானியங்கித் துப்பாக்கி வாகனத்தை அங்குகொண்டுவர இயலவில்லை. அது அங்குக் கொண்டுவரப் பட்டிருந்தால் இறந்தோரின் எண்ணிக்கை ஐயாயிரத்தைத் தாண்டியிருக்கும்.*

*இந்த நிகழ்வு குறித்து 25.08.1919ஆம் நாள் ஜெனரல் ரெஜினால்ட் டயர் ஸ்டா.்.ப் டிவிஷன் எனும் ராணுவ மேலதிகார நிலையினருக்கு,*

***"நான் சுட்டேன். கூட்டம் சிதறிப்போகும் வரை சுட்டுக் கொண்டேயிருந்தேன். மக்களின் நெஞ்சிலே எவ்வளவு பெருந்தாக்கம் ஏற்படுத்த வேண்டுமென்று எண்ணங் கொண்டேனோ அதன் படிக்கு அத்தனை அதிகம் சுடவில்லை என்றுதான் நினைக்கிறேன். என்னிடம் மட்டும் இன்னும் கூடுதலாகப் படையாட்கள் இருந்திருந்தால் அடிபட்டோர் மற்றும் இறந்தோரின் எண்ணிக்கை இன்னும் கூடுதலாகவே இருந்திருக்கும். நான் அங்கு போனது வெறுமே கூட்டத்தைக் கலைக்க மாத்திரமல்ல. மக்களின் நெஞ்சிலே ஒரு குலைநடுக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்றுதான் போனேன். அங்கு கூடினவர்கள் நெஞ்சில் மட்டுமல்ல, பஞ்சாப் முழுதும் ஆன எல்லோருக்குமே குலை நடுக்கம் தோன்ற வேண்டும் என்றுதான் சுட்டுக் கொண்டேயிருந்தேன். அவசியத்துக்கு மேல் கடுமை காட்டிவிட்டேனோ என்ற கேள்விக்கே இடமில்லை."***

*என்று வாக்குமூலம் அளித்தார்.*

*ஜாலியன் வாலாபாக் படுகொலை இந்தியர்களை மூச்சடைக்கச்செய்தது. ரத்தச்சேறான அந்த மைதானத்திற்குச் சென்ற பதினொரு வயதுடைய ஒரு சிறுவன் மட்டும் ஒரு கைப்பிடி மண்ணை எடுத்துத் தன் வீட்டில் வைத்தான். இந்தியர்களின் ரத்தம் தோய்ந்த மண்ணின் மீது பிரிட்டி'ாரைப் பழிவாங்குவதாகச் சபதம் செய்தான். அச்சிறுவன்தான் பகத்சிங்.*

## *02. சைமன் கமிஷன் எதிர்ப்பு*

*1919ஆம் ஆண்டு பிரிட்டிஷாரால் இயற்றப்பட்ட இந்திய அரசுச் சட்டம் இந்தியர்களுக்கு வரையறுக்கப்பட்ட தன்னாட்சி அதிகாரத்தை வழங்கியது. இதன் மூலம் இரட்டை ஆட்சிமுறை நடை முறைக்கு வந்து, சட்டமன்றங்கள் உருவாக்கப்பட்டன. இந்திய தேசிய காங்கிரஸ் இதை ஏற்கவில்லை தேர்தலில் போட்டியிடவும் இந்தியாவின் நிர்வாகத்தில் பங்கேற்கவும் மறுத்து விட்டது. நீதிக்கட்சி முதலான கட்சிகள் தேர்தல்களில் பங்கேற்று ஆட்சி செய்தன. இந்திய அரசுச் சட்டத்தில் இரட்டை ஆட்சி முறை நடைமுறைக்கு வந்து பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் அதன் நிறை, குறைகளை ஆராய குழுவொன்றை அமைக்க வழிவகை செய்திருந்தது.*

*அதன்படி 1928ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசு பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏழு பேர் அடங்கிய குழு ஒன்றை அமைத்தது. இதன் தலைவர் சர் ஜான் சைமன். அவரது பெயரால் இக்குழு "சைமன் கமிஷன்" என்று வழங்கப்பட்டது.*

இந்தியாவுக்கு வந்து ஆட்சி யாளர்கள், ஆளும் கட்சிகள், எதிர்க்கட்சிகள் எனப் பல தரப்பினருடன் கலந்தாலோசித்து அவர்களின் கருத்துகளைக் கேட்டறி வதும், அடுத்த எந்த மாதிரியான சீர்திருத்தங்களை அறி முகப்படுத்தலாம் என்பது குறிந்து பரிந்துரை செய்வதும் இக் குழுவுக்குத் தரப்பட்டிருந்த பணிகளுள் சிலவாகும். 1928ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல்வாரத்தில் சைமன் கமிஷன் முதல் முறையாக இந்தியா வந்திறங்கியது.



இந்தியர்களின் அரசியல் எதிர்காலத்தை முடிவு செய்ய நியமிக்கப்பட்ட குழுவில் இந்தியர் ஒருவர் கூட இடம் பெறாததால் பெரும்பாலான இந்தியர்கள் அதிருப்தி கொண்டனர். இந்திய தேசிய காங்கிரஸ், முஸ்லிம் லீக் போன்ற கட்சிகள் சைமன் குழுவினைப் புறக்கணிக்க முடிவு செய்தன.

சைமன் கமிஷன் இந்தியாவுக்கு வந்தபோது அதனை எதிர்த்து மக்கள் போராட்டங்கள் நடத்தினர். "சைமன் திரும்பிப் போ" என்று கோஷமிட்டபடி சைமன் சென்ற சென்னை, கல்கத்தா, டெல்லி, லக்னோ, பட்னா ஆகிய நகரங்களில், வழியெங்கும் ஆயிரக் கணக்கானோர் கருப்புக் கொடி போராட்டங்கள் நடத்தினர். நீதிக்கட்சி போன்ற சில கட்சிகள் சைமன் கமிசனுக்கு ஒத்துழைப்பு அளித்து தங்கள் கருத்துகளைத் தெரிவித்தன. 1928ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டாம் முறையாக சைமன் கமிஷன் இந்தியா வந்தபோது அதே போராட்டங்கள் மேலும் தீவிர மடைந்தன. 30.10.1928ஆம் நாள் லாகூரில் சைமன் கமிஷன் எதிர்ப்பு ஊர்வலம் நடத்த 'நவஜவான் பாரத் சபாவி' இயக்கம் ஏற்பாடுசெய்தது. அவ் ஊர்வலத்தைப் 'பஞ்சாப் சிங்கம்' என்று போற்றப்படும் லாலா லஜபதிராய் தலைமை தாங்கி நடத்தினார். ஊர்வலத்தில் சைம னுக்குக் கறுப்புக்கொடி காட்டப்

*பட்டது. ஊர்வலத்தைக் கலைக்கக் காவல்துறை தடியடி நடத்தியது. லாலா லஜபதிராய் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டார்.*

***"என்மீது விழு ஒவ்வொரு அடியும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கல்லறை மீது அறையப்படும் ஆணியாகும்"*** *என்று காயத்துடன் கர்ஜித்தார் லாலா லஜபதிராய். அவருக்குச் சிகிச்சை அளித்தனர். ஆனால், அவர் 17.1.1928ஆம் நாள் மரணமடைந்தார். அவரது இறுதி ஊர்வலத்தில் ஒன்றரை லட்சம் மக்கள் கலந்து கொண்டனர்.*

### *03. தொழில் தகராறு மசோதா எதிர்ப்பு*

*1928ஆம் ஆண்டு வட மாநிலங்களில் பரவலாகத் தொழிலாளர் வேலை நிறுத்தங்கள் தீவிரமாக நடைபெற்றன. வளர்ந்து வரும் தொழிலாளர் இயக்கத்தைக் கடுமையாக ஒடுக்க நினைத்து பிரிட்டிஷ் அரசு 'தொழிற் தகராறு மசோதா'வை டெல்லி மத்திய சபையில் கொண்டுவந்தது.*

*'தொழிற் தகராறு மசோதா' நிறைவேற்றப்படும் நாளில் டெல்லி மத்திய சபையில் உயிர்ச்சேதமின்றி வெடிகுண்டுகள் வீசுவதென்றும், தானாகவே கைதை ஏற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் வழக்காடுவதன் மூலம் பிரிட்டிஷ் அரசின் அடக்கு முறைகளை அம்பலப்படுத்தலாம் என்றும் ஒரு திட்டத்தை பகத்சிங் வகுத்து, அதனைத் தன் இயக்கத்தின் மத்திய கமிட்டியில் கூறினார். இவற்றைச் செய்து முடிந்த பின்னால் ஒரு வேலை தப்ப முடியவிலையென்றால், தூக்கு மேடை செல்லவும் தயாராக இருக்க வேண்டுமென்றார். இவர் முன் வைத்த திட்டம் அவ் இயக்கத் தாரால் ஏற்கப்பட்டது.*

*08.04.1929ஆம் நாள் டெல்லி மத்திய சபையின் கேள்வி நேரத்தில் வைஸ்ராயின் சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தித் 'தொழிற் தகராறு மசோதா' நிறைவேறியதை அறிவிக்க ஜெனரல் சூஸ்டர் எழுந்தார். உடனடியாகப் பார்வையாளர் அரங்கிலிருந்த பகத்சிங்கும், பி. பதுகேஷ்வர் தத்தும் வெடிகுண்டுகளை யாருமற்ற இருக்கைகளின் மீது வீசினர்.*

*குண்டை வீசியபின் இருவரும் தப்பி ஓட முயற்சி செய்யவில்லை. யாரையும் கொல்வது அவர்களுடைய நோக்கம் அல்ல. வீசப்பட்ட குண்டுகள் பலவீனமா னவைதான்.*

கைதாகி, விசாரணையில் நீதி மன்றத்தைப் பிரசார மேடையாக்குவது தான் அவர்களின் திட்டம். மக்கள் மத்தியில் தங்களுடைய இயக்கத் தையும், சித்தாந்தத்தையும் பரவலாக் குவதுதான் அவர்களின் எண்ணம். குண்டுவீச்சிற்குப் பின் மன்றத்தில் அவர்கள் 'செவிடர்களை கேட்கச் செய்வதற்கு வெடிகுண்டு முழக்கங்கள் அவசியமானவை' எனும் தலைப்பிலான சிவப்புத் துண்டறிக்கைகளை வீசியவாறு, 'புரட்சி நீடூழி வாழ்க', 'ஏகாதிபத்தியம் ஒழிக', 'உலக பாட்டாளிகளே ஒன்று சேருங்கள்' ஆகிய முழக்கங்களை எழுப்பினார்கள். அவர்களை நெருங்கத் தயங்கியவாறு காவலர்கள் நீண்ட நேரம் நின்றனர்.

பின்னர் பகத்சிங் அவர்களை நோக்கித் தாங்கள் கைதுக்குத் தயாராக இருப்பதாகவும், தங்களிடம் ஆயுதங்கள் இல்லையெனவும் உறுதியளித்த பின்னரே அக் காவலர்கள் அவர்களை நெருங்கிவந்து அவர்களைக் கைது செய்தனர்.



06.06.1929 ஆம் நாள் பகத்சிங்கும், பி.கே.தத்தும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கை வரலாற்றுப் புகழ் பெற்றதாகும். வெடிகுண்டு வீசியதை ஏற்றுக்கொண்ட தோழர்கள், அதன் நோக்கம் உயிர்ப் பலியல்ல என்றும், அதன் அரசியல் நோக்கம் குறித்தும் வாதாடினர்.

"எங்களது ஒரே நோக்கம் 'செவிடர்களைக் கேட்கச்செய்வதும், செவிமடுக்காதவர்களுக்குத் தக்க எச்சரிக்கை வழங்குவதுமேயாகும்'. மிகப்பலரும் எங்களைப் போன்றே செய்ய விரும்பினர். வெளித் தோற்றத்தில் அமைதியாகக் காட்சியளிக்கும் இந்திய மக்கட் கடலிலிருந்து, ஒரு மாபெரும் சூறாவளி எழும்பவிருக்கிறது... கற்பனாவாத சாத்வீகத்தின் காலம் முடிந்து விட்டதைத் துளியும் சந்தேகத்திற்கிடமின்றி இளைய தலைமுறை ஏற்றுக் கொண்டு விட்டதை நாங்கள் அடையாளப் படுத்த மட்டுமே செய்துள்ளோம்."

*‘இன்குலாப் ஜிந்தாபாத்’, ‘ஏகாதிபத்தியம் ஒழிக’, ‘உழைக்கும் வர்க்கம் வாழ்க’ போன்ற முழக்கங் களை எழுப்பிக்கொண்டே தினமும் நீதி மன்றங்களுக்குள் வந்தனர். ‘சர்வரோரீ கீ தமனா அப் ஹமாரா தில் மே ஹே’ (வீர மரணத்திற்காக எங்கள் இதயம் ஏங்குகிறது), ‘மேரா ரங்க் தே பசந்தி சோலா’ (வீரம், தியாகம் ஆகியனவற்றின் நிறமான சந்தன நிறத்தை என் ஆடைக்குத் தாரீர்) போன்ற பாடல்களை நீதி மன்றங்களில் பாடினர்.*

*அவை அனைத்தும் நாளிதழ்களில் வெளியாயின. நாடு முழுவதும் உள்ள மக்களின் ஆதரவையும், அனுதாபத் தையும் பகத்சிங் மற்றும் அவர்தம் தோழர்கள் பெற்றனர்.*

*அன்று உலகப் பத்திரிக்கைகளில் விரிவாக வெளியிடப்பட்ட பகத்சிங்கின் அறிக்கைகள் மக்களால் வரவேற்கப் பட்டன. வழக்கை விரைந்து நடத்திய பிரிட்டிஷ் அரசு, 12.06.1929 ஆம் நாள் பகத்சிங் மற்றும் பி.கே.தத் இருவருக்கும் ஆயுள் தண்டனை விதித்தது.*

**முனைவர் ப. சரவணன்,**
தமிழ் உதவிப்பேராசிரியர்

## அன்பு

*“அன்பு என்பது*
*கல்லுக்குள் இருக்கும் சிற்பம்போல.*
*உணர்ந்தவனுக்கு அது*
*உயிருள்ள சிற்பம்.*
*உணராதவனுக்கு அது வெறும் கல்.*
*மேகம் கொடுக்கும் பரிசு மழை*
*காற்று கொடுக்கும் பரிசு தென்றல்*
*மலர் கொடுக்கும் பரிசு மணம்*
*கடவுள் கொடுக்கும் பரிசு என் தோழி*
*என் தோழி கொடுக்கும் பரிசு*
*அவள் அன்பு”*

**மு. மாரூபா**
*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

## அன்பு

*“காயப்பட்ட மனத்தை நேசி*
*நேசித்த மனத்தைக்*
*காயப்படுத்தாதே*
*வாழ்க்கையை வாழ்ந்து பார்ப்போம்*
*உயிர் என்ற அன்பு உள்ளவரை.*
*உண்மையான அன்பு*
*அடித்தாலும் வலிக்காது.*
*பெற்றாலும் கொடுத்தாலும்*
*மனம் நிறைந்து அன்பைக்*
*கொடுங்கள்.”*

***டி. கீதாஞ்சலி***
இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு

சிறுகதை:

# மரம் வளர்ப்போம்

செ. ராஜேஸ்வரி

இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு

*நண்பகல் உணவை முடித்துக் கொண்டு கையில் பந்துடன் பள்ளிக்கு வெளியே வந்தான் பாலன். பிற்பகல் பள்ளி தொடங்க இன்னும் இருபது நிமிடங்கள் இருந்தன. அதற்குள் கொஞ்சநேரம் விளையாடலாம் என்று தன் நண்பர்களுடன் தெருவுக்கு வந்திருந்தான் அவன்.*

*தெருவை ஒட்டி ஒரு சிறிய விளையாட்டுத்திடல் இருந்தது. அங்கு ஏற்கனவே பல மாணவர்கள் சாப்பிட்டும் சாப்பிடாமலும் வந்து விளையாடிக் கொண்டிருந்தனர். விளையாட்டுத் திடல் கூச்சலிலும் கும்மாளத்திலும் மூழ்கி இருந்தது.*

*தெருவை குறுக்காகத் தாண்டி திடலின் முகப்புக்கு வந்த பாலன், அந்தச் சாலையோர நடைபாதை மீது சற்றுத் தள்ளி, தள்ளி சிலர் குழிபறித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து நின்றான். பக்கத்திலிருந்த தனது நண்பன் குரசாமியைப் பார்த்துக் கேட்டான். அவனுக்கும் தெரியவில்லை.*

*இருவரும் குழிபறித்துக் கொண்டிருப் பவர்களுக்கு அருகே சென்று இந்தக் குழி எதற்காக? என்று கேட்டனர்.*

*தலைப்பாகையுடன் இருந்த ஒருவர் வியர்வையில் உடல் முழுவதும் நனைந்த கோலத்தில் அந்த இரு சிறுவர்களையும் பார்த்தார். குழி சதுர வடிவில் இருந்தது. அதற்கு வெளியே ஈரமாண மண்ணும் கல்லும் குவியலாக இருந்தன.*

*தம்பி! நாங்க யாருக்கும் குழிபறிக்கலேப்பா! அரசாங்கத்துல இருக்கிறவங்க நாளைக்கு இங்கே மரம் நடப் போறாங்களாம். மரம் வைக்கிறதுக்காகக் குழி பறிக்கி றோம். என்றார்.*

*டேய் செடி வைக்கிறதுக்குக் குழி பறிக்கறாங்களாம். வாடா போலாம்.*

*“ இவிங்களுக்கு வேற வேலை இல்லை என்று கூறி சிரித்த பாலன், பந்தைக் காலால் உருட்டிக் கொண்டு குரசாமி பின்னால் திடலை நோக்கிச் சென்றான்.*

*மறுநாள் மாலை பள்ளி முடிந்து பாலனும் குருசாமியும் பையைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தனர். தலையில் மாட்டிய புத்தகப் பையுடன் சாலை ஓரத்தில் இடம் விட்டு, விட்டு செடிகள் நடப்பட்டிருப்பதைப் பார்த்தான்.*

*ஒவ்வொரு செடியும் அழகாக இளந்தளிர் இலைகளோடு குழந்தைபோல காற்றில் மெல்ல அசைந்தாடிக் கொண்டிருந்தன.*

*குருசாமி, அந்தக் குழந்தைச் செடியின் தோற்றத்திலே தன் மனத்தைப் பறிகொடுத்தான்.*

*டேய் பாலா! பாருடா! சின்னச் செடி எவ்வளவு அழகா இருக்குது!*

*பாலனுக்குப் புரியவில்லை. செடி அழகாக இருக்குதாமே! இந்த குரு ஒரு குருட்டுப்பையன். ஏன்று நினைத்துக்கொண்டான்.*

*குருசாமி பாலனிடம் இந்தச்செடி நல்லா பெருசா நிறைய கிளையோட வளருமாடா என்று கேட்டான். அதற்குப் பாலனுக்குக் குருசாமி மீது கோபம்தான் வந்தது.*

*அடச்சீ! வாடா போசாமெ! என்னமோ செடியாம். மரமாம், கிளையாம் ரொம்ப தேவைதான் என்றான். நடந்து கொண்டே குருசாமி பேசினான்.*

*“டேய் மரங்கள் நாட்டுக்கு ரொம்பத் தேவைதாண்டா. மரம் இருந்தாத்தான் மழை பெய்யும். மழை பெய்தாத்தான் பயிர் நன்கு வளரும். நாட்டில் வறட்சி நிலை ஏற்படாது. நாட்டு மக்கள் சந்தோஷமா வாழ்வாங்க.” என்றான்.*

*பாலா நீயும் உங்களோட வீட்டுல செடியை வளர்க்கலாமே என்றான்.*

*உடனே பாலாவுக்குக் கோபம் வந்துவிட்டது. நாளைக்கே அந்தச் சாலையோரம் இருக்கற செடியைப் பறிச்சி எறியப்போறேன் என்றான். குருசாமி அப்படி எதாவது செஞ்ச நா உன்ன அடிச்சிடுவேண் என்று கோபமாகக் கூறினான்.*

*மூன்று நாட்கள் கழித்து பாலனும் குருசாமியும் வகுப்பில் கட்டிப்பிடித்துச் சண்டையிட்டனர். மாணவர்கள் வேடிக்கை பார்த்தனர். ஆசிரியர் வந்து இவர்களை விலக்கிவிட்டு, சண்டைக்கான காரணத்தைக் கேட்டார்.*

பாலன் பதில்பேசவில்லை. குருசாமி நடந்ததை ஆசிரியரிடம் கூறினான்.

“சார் நம்ம பள்ளிக் கூடத்துக்கு முன்னாடி நடைபாதையிலே அரசாங்கம் மரம் நட்டு வச்சிருச்தாங்க அது நல்லா வளர்ந்துட்டு இருந்தது சார். அந்தச் செடியை பாலன் வேரோடு பறிச்சு எறிஞ்சிட்டான் சார். அதனாலதான் சார் நா அவன அடிச்சேன்.”

ஆசிரியர் பாலனைத் தன் அருகில் அழைத்து,

“ஒரு செடியை நட்டு வைத்து அது மரமாக வளர எத்தனை சிரமப்படவேண்டியிருக்கு தெரியுமா? அதனை ஆடுகள் கடிக்காமல் இருக்க வேண்டும். நோய்த் தொற்று ஆகாமல் இருக்க வேண்டும்”

என்று பல கருத்துகளை எடுத்துக்கூறினார்.

சில நாட்கள் கழித்து அந்தப் பள்ளியில் மரம் நடும் விழா நடைபெற்றது. அவ்விழா மேடையின் முன் முதல் வரிசையில் பாலனும் குருசாமியும் அமர்ந்திருந்தனர். அரசு அதிகாரி ஒருவர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

“ஒவ்வொரு மரக்கன்றும் உங்களைப்போன்ற மனிதக் கன்றுகளே. உங்களைப்போல அவையும் சிறப்புடையவே”

என்ற பொருளில் பேசினார்.

பாலனுக்குச் செடிகள் மீது பற்று ஏற்பட்டது. இனி அவனும் மரம் வளர்க்க விருப்பப்படுவான்.

## முகௌக் கற்குகை

வட மேற்கு சீனாவின் கான்சு மாநிலத்தில், மிங்சா மலையின் கிழக்கு அடிவாரத்தில் சுமார் 2 கிலோமீட்டர் தொலைவில் செதுக்கப் பட்ட கற்குகைகள் ஆகும்.

இதுவரை உலகளாவிய நிலையில் அளவில் மிகப் பெரிய, மிகவும் முழுமையாகப் பேணப்பட்டுள்ள புத்த மதக் கலைக்கருவூலமாக முகௌக் கற்குகை திகழ்கின்றது.

1987ஆம் ஆண்டு, உலக பாரம்பரியக் களங்கள் பட்டியலில் முகௌக் கற்குகை சேர்க்கப்பட்டது. இங்குள்ள புத்தரின் உருவச் சிலைகள், சுவர் ஓவியங்கள்

*ஆகியவற்றினால், இக்குகை உலகப் புகழ்பெற்றுள்ளது.*

*ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய புத்த மதக் கலையை இது பிரதிபலித்துள்ளது என்று உலக மரபுச்செல்வ ஆணையம் மதிப்பீடு செய்துள்ளது.*

*வட மேற்கு சீனாவின் கான்சு மாநிலத்து துன்ஹுவாங் நகரின் புறநகரில் மிங்சா மலை ஒன்று உள்ளது.*

*இம்மலையின் கிழக்கு அடிவாரத்தில் பிரிந்துவிட்ட மலைப் பகுதியில் தெற்கிலிருந்து வடக்காகச் செல்லும் பாதையில் சுமார் 2 கிலோமீட்டர் தொலைவில் ஏராளமான குகைகள் செதுக்கபட்டுள்ளன.*

*இக்குகைகள், மேல் பகுதி முதல் கீழ் பகுதி வரை 5 தட்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒழுங்கான முறையில் செதுக்கப்பட்ட மிகவும் கம்பீரமான, உலகில் புகழ்பெற்ற கற்குகை துன்ஹுவாங் முகௌக் கற்குகை ஆகும்.*

**திவ்யா**

இளங்கலை வேதியியல் மூன்றாமாண்டு

*சிறுகதை:*

# தீய பழக்கம்

**ரா. பிரசன்ன வெங்கடேஷ்**

*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

*விருதுநகர் மாவட்டத்தில் உள்ளது வெம்பக்கோட்டை என்னும் சிறிய கிராமம். அங்குதான் நானும் என் நண்பன் ராஜேசும் பிறந்தோம். நாங்கள் இருவரும் பக்கத்து பக்கத்து வீடுதான். என் தந்தை ஒரு குடிகாரர். அவர் தினமும் குடித்துவிட்டு என் தாய்யை அடிப்பார். அதே கொடுமைதான் ராஜேஷ் வீட்டிலும். எங்கள் இருவர் குடும்பமும் வறுமையில் தவித்தது.*

*எனக்கும் ராஜேஷ்க்கும் ஐந்து வயது முடிந்தது. உடனே, எங்களின் பெற்றோர் எங்களைப் பள்ளியில் சேர்த்தனர். நானும் ராஜேஷ்வும் ஒரே வகுப்பில் தாம் படித்தோம்.*

*என் தாய் விறகு வெட்டி வரும் வருமானத்தில் என்னைப் படிக்க வைக்கின்றனர். ஏன், என்றால் என் தந்தை தான் சம்பாரிக்கும் பணத்தை முழுவதையும் தீய பழக்க வழக்கங்களுக்குச் செலவு செய்து விடுவார். அச்சோகத்தில் என் தாய் என்னிடம் ஒன்று கூறினார்.*

*அதாவது நீயும் உன் தந்தைபோல் ஆகிவிடாதே. நீ நன்றாகப் படித்து பிறருக்கு உதவவேண்டும் என்று சொன்னார். அதை நான் எனக்குரிய வேதவாக்காக எடுத்துக்கொண்டேன்.*

*இதே சிக்கல் ராஜேஷ் குடும்பத்திற்கும் இருந்தது. இதனை உணர்ந்த நாங்கள் நன்றாகப் படித்தோம். ராஜேஷ் அப்பாவுக்கு லாட்டரிச்சீட்டு வாங்கும் பழக்கம் இருந்தது.*

*ஒருநாள் அவர் வாங்கிய லாட்டரிச்சீட்டில் ஒரு கோடி ரூபாய் பரிசு விழுந்தது. அன்று இரவு அந்த அலுவலகத்திற்குச் சென்று அப்பரிசு தொகையினைப் பெற்றுவந்தார்.*

*அன்றுமுதல் எங்கள் வாழ்வில் திருப்பம் ஏற்பட்டது. அதுநாள்வரை நடந்து பள்ளிக்குச்சென்ற நாங்கள் மிதிவண்டியில் பள்ளிக்குச் செல்லத் தொடங்கினோம். என் நண்பன் ராஜேஷ் கையில் அதிக அளவில் பணம் புழங்கியது.*

*அவன் தீய பழக்கங்களைக் கற்றுக்கொள்ளத் தொடங்கினான். அவற்றால் ஏற்படும் விளைவுகளை நான் அவனுக்கு எடுத்துக்கூறினேன். அவன் அவற்றை உணர்வதாக இல்லை. அவன் தவற்றை அவன் அப்பாவிடம் கூறினேன். அவர் அதனைக் கண்டுகொள்ளவில்லை.*

*நான் படிப்பில் முன்னேறி மருத்துவப்படிப்பில் சேர்ந்தேன். ராஜேஷ் படிப்பில் கவனம் செலுத்தாததால் கலைக் கல்லூரியில் சேர்ந்தான். ராஜேஷ் தீய பழக்கங்களுக்கு அடிமையாகி உடல்நிலையைக் கெடுத்துக் கொண்டான்.*

*நான் பட்டம்பெற்று என் ஊரிலேயே ஒரு மருத்துவ மனையினைத் தொடங்கி னேன். அதில் பல நோயாளிகள் சேர்ந்தனர். அவர்களுக்குச் சிகிச்சை அளித்தேன். அவர்களுள் ஒருவன் ராஜேஷ்.*

*அவனுக்குப் பலவகையில் சிகிச்சை அளித்து அவனைக் குணப்படுத்தி, தீய பழக்கங் களிலிருந்து மீட்டேன். அவன் பெற்றோர்கள் மகிழ்ந்தனர்.*

*இப்போது ராஜேஷ்வும் தீய பழக்கங்களுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு, அவற்றை மக்களுக்கு உணர்த்தி வருகின்றான்.*

# மதுப்பழக்கம் மதிப்பைக் கெடுக்கும்

எம். ராம்குமார்

*இளங்கலை கணினி பயன்பாடு*

*இரண்டாமாண்டு இ பிரிவு*

***முன்னுரை***

***ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்***
***சான்றோர் முகத்துக் களி***

*என்றார் வான்புகழ் வள்ளுவனார். அதாவது குடிகார மகனைப் பெற்றவளும் புறந்தள்ளுவாள் என்றார். குடிப்பழக்கம் ஒருவரிடம் குடிபுகுந்தால் அது அவர் குடியிலும் பல கோர உருவங்களில் புகுந்து, கோபுரம்போல் உயர்ந்திருந்த குடும்பத்தையும் குட்டிச்சுவராக்கிவிட்டே விடைபெறும். அதனால், மதுப்பழக்கத் தீமையை ஒழிக்க வேண்டியது நமது முதன்மைக் கடமை.*

***மதுவினால் வரும் கேடுகள்***

*குடி குடியைக் கெடுக்கும் என்று சொன்னால் குடிப்பாரே மறுக்கமாட்டார். மது அருந்துவோர் உடல் களைப்பைப் போக்குவதற்காகக் குடிக்கிறோம் என்று காரணம் கூறுவார்கள். உண்மையில் அது உடலுக்குத் தீமைதான் உண்டாக்குகிறது. குடல் வெந்து புண்ணாகிவிடுகிறது. நரம்புத் தளர்ச்சி ஏற்படுகிறது. விரைவில் மரணம் ஏற்படுகிறது.*

*குடிபோதைக்கு அடிமையானவர்கள் தேவைப்படும் நேரத்துக்குக் குடிக்காவிட்டால் பைத்தியம் பிடித்தவர்களைப் போல் ஆகிவிடுவார்கள். இதன் காரணமாகப் பல கொடிய நோய்கள் உண்டாகின்றன.*

*போதை அதிகமாவற்காகச் சாராயத்தில் பல பொருள்கள் சேர்க்கப்படுகின்றன. இந்தக் கள்ளச் சாராயத்தை அருந்தி உயிர் துறந்தவர்கள் பலர்.*

***இலக்கியங்களில் மது எதிர்ப்பு***

*தொன்று தொட்டு இருந்து வருகின்ற மதுப்பழக்கத்தை எதிர்த்துக் குரல் கொடுத்த முதற்புரட்சியானர் திருவள்ளுவர்.*

***உண்ணற்க கள்ளை உணில் உண்க***
***சான்றோரால் எண்ணப்பட்ட வேண்டாதார்***

*என்கிறார். மேலும் கள்ளுண்பவரைக் கண்டு பகைவர்கள் அஞ்சுவதில்லை.*

*கள்ளுண்பவர் உள்ளூர் மக்களாலும் இகழப்படுவர். கள்ளுன்பவர்களைச் சான்றோர் மதியார். நாணம் என்னும் நல்லாள் அவர்களை விட்டு நீங்கிவிடுவாள். கள்ளுண்பவர் நஞ்சுண்பவரே என்றெல்லாம் கள்ளின்*

கொடுமையை வள்ளுவனார் விளக்கு கிறார்.

**முயக்குங் கள்ளும் மன்னுயிர் கோறலும்**
**கயக்கறு மாக்கள் கடிந்தனர்**

என்று மணிமேகலையும் கூறுகின்றது.

### அறிவு கெடுகிறது

மது உள்ளே செல்லச் செல்ல மதி வெளியே சென்று விடுகிறது. முதலில் மனிதன் மதுவைக் குடிக்கத் தொடங்குகிறான். நாளடைவில் மது அவனையே குடிக்கத் தொடங்கி விடுகிறது. குடிகாரனுக்கு அறிவு மழுங்கிவிடுகின்றது. என்ன பேசுகிறோம் என்ன செய்கிறோம் என்பது அவனுக்குத் தெரிவதில்லை.

'குடிகாரன் பேச்சு பொழுது விடிந்தால் போச்சு' என்பது பழமொழி. குடித்துக்கொண்டே இருப்பவர்களால் தங்கள் தொழிலைத் திறம்படச் செய்ய முடியாது. வறுமை அவர்களை வந்தடையும். மக்களின் கல்வி பாழாகும். குடும்பம் நடுத்தெருவுக்கு வந்துவிடும்.

கள்குடியர் ஒருவரைப் பற்றி மணிமேகலை மிகவும் இழிவாகக் கூறியுள்ளது. அறிவு அழிந்தால் அனைத்தும் அழியும் அல்லவா?

### மதுவிலக்கின் நன்மை

மதுவிலக்கினால் மனிதன் மனிதனாக வாழலாம். உழைத்து ஈட்டிய செல்வம் குடும்பத்திற்குப் பயன்படும். தாய்க்குலத்தின் அவலம் நீங்கும். வறுமை விலகி விடும். நாடும் வீடும் செழிக்கும், சேமிப்பு வளரும். புகழ் உண்டாகும். உழைப்பின் பெருமை உணரப்படும். உடல்நலமும் அறிவு நலமும் பெருகி வளமான வாழ்வு அமையும்.

### அரசின் கடமை

வருவாய் குறைந்தாலும் பெரும் இழப்பு ஏற்பட்டாலும் அரசு மது விலக்கைக் கொண்டுவர வேண்டும். பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டிவிடுவது போல் என்பார்கள். அதற்கேற்ப மதுக் கடைகளையும் திறந்துவிட்டு குடி குடியைக் கெடுக்கும் என்று அங்கு எழுதி வைக்கச் சொல்கிறது நமது அரசு.

மதுக்கடைகளைத் திறந்தால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் ஏழைத் தொழிலாளிகள். பணக்காரக் குடிகாரர்களும் பாதிக்கப் படுவதில்லை. நடுத்தர வர்க்கத்தினரும் பாதிக்கப் படுவதில்லை. தினக்கூலி பெறும் தொழிலாளிகள்தான்

பெரிதும் பாதிக்கப்படுட்டுள்ளார்கள். கட்டட வேலை செய்பவர்களில் பெரும்பாலான பெண்களும் குடிக்கத் தொடங்கிவிட்டனர். மதுவிலக்கைக் கடுமையாக அமல்படுத்த வேண்டும்.

குடிப்பவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்க வேண்டும். அப்போதுதான் இந்தக் கொடுமையிலிருந்து சமுதாயத்தைக் காப்பாற்ற முடியும்.

**உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்**
**கட்காதல் கொண்டொழுகு வார்**

**முடிவுரை**

குடிப்பழக்கத்தால் சமுதாயத்தில் பல கேடுகள் உண்டாவதைக் கண்ட வள்ளுவர் கள்ளுண்ணாமை என்ற ஓர் அதிகாரத்தைத் திருக்குறளில் இடம்பெறச்செய்தார். அதில் கள்ளைக் குடிக்காதே! குடிப்பதனால் சான்றோர்கள் உன்னை ஒரு பொருட்டாக மதிக்க மாட்டார்கள் என்கிறார்.

**உண்ணற்க கள்ளைஉணில் உண்க சான்றோரால்**
**எண்ணப்பட வேண்டா தார்**

மக்களும் குடிக்கக் கூடாது. அரசும் குடிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தரக்கூடாது. அப்போதுதான் இக்கொடுமையை ஒழிக்க முடியும். எனவே, நாமும் மதுப்பழக்கத்தைத் தவிர்த்து வளமான வாழ்வைப் பெறுவோம்.

# ரக்பி விளையாட்டு

பண்டைக்கால கிரேக்கத்தில் ரக்பி கால்பந்தை ஒத்த எப்பிசுக்குரோசு என்னும் ஒரு விளையாட்டு விளையாடப்பட்டு வந்தது. வேல்சிலும் மத்திய காலப்பகுதியில் விளையாடப்பட்ட இதுபோன்ற ஒரு விளையாட்டு கினாப்பன் அல்லது கிரியாப்பன் என அழைக்கப்பட்டது.




ரக்பிக்கு முன்னோடியாக ஐரிய நாட்டில் விளையாடப்பட்ட விளையாட்டை அவர்கள் கையிட் என அழைத்தனர்.

கோர்னியர்களும் இது போன்ற ஒன்றை வெண்கலக் காலத்தில் இருந்து விளையாடி வந்தனர். கிழக்கு அங்கிலியரும், பிரான் சியரும் கூட இதை ஒத்த விளையாட்டுகளை விளையாடினர்.

*1750க்கும் 1859 ஆம் ஆண்டுக்கும் இடையில் ரக்பி பாடசாலையில் விளையாடப்பட்ட கால்பந்து விளையாட்டில் பந்தைக் கைகளால் தொட அனுமதிக்கப்பட்டது.*

*ஆனால், பந்தைக் கைகளில் வைத்தபடி எதிர்த்தரப்பு இலக்கை நோக்கி ஓடுவதற்கு அனுமதிக்கப் படவில்லை.*

*அக்காலத்தில் விளையாட்டில் பங்கு கொள்பவர்களின் எண்ணிக்கை குறித்த வரையறை எதுவும் இருக்கவில்லை. சில வேளைகளில் ஒரு விளையாட்டில் நூற்றுக் கணக்கானவர்களும் பங்குபற்றினர்.*

*பந்தைக் கையில் கொண்டு ஓடலாம் என்னும் புதிய முறை 1859க்கும், 1865 ஆம் ஆண்டுக்கும் இடையில் அறிமுகமானது.*

*வில்லியம் வெப் எல்லிசு என்பவரே 1823 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஒரு விளையாட்டில், முதன் முதலாக உள்ளூர் விதிகளுக்கு மாறாகக் கையில் பந்தைக் கொண்டு ஓடியவராகக் குறிப்பிடப்படுகிறார்.*

*இதற்குச் சில காலத்தின் பின்னர் இவ்விளையாட்டுக்கான விதிகள் எழுத நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. அப்போது உள்ளூரில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகள் மட்டுமே இருந்தன.*

*1870இல் முதன் முதலாக எழுத்து மூலமான விதிகளை உருவாக்கியவர்கள் ரக்பி பாடசாலையைச் சேர்ந்தவர்கள் ஆவர்.*

*ஏறத்தாழ இக் காலப்பகுதியில், ரக்பி பாடசாலையின் தலைமை ஆசிரியரான தாமசு ஆர்னோல்ட் என்பவரின் செல்வாக்குப் பிற விடுதிப் பாடசாலைகளிலும் பரவலாயிற்று.*

*சமநிலைக் கல்வியில் விளையாட்டும் ஒரு பகுதியாக அமையவேண்டும் என்ற அவரது கருத்து இயல்பாகவே ரக்பி விதிகள் நாட்டின் பல பகுதிகளிலும் பரவ வழிகோலியது. பின்னர் இது உலகம் முழுவதிலும் பரவியது.*

**ஏ. கீர்த்தனா**

*இளங்கலை வேதியியல் மூன்றாமாண்டு*

# சித்தர்களும் ஆசனங்களும்

செ. ஜீவிதா
*இளங்கலை கணினி பயன்பாடு*
*இரண்டாமாண்டு இ பிரிவு*

*5000 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் தோன்றிய உடற்பயிற்சி தியான முறை யோகக் கலை ஆகும். அதில் யோகாசனம் குறிப்பாக உடற்பயிற்சியையும் நிலைகளையும் குறிக்கும்.*

*யோகம் என்ற சொல் சமஸ்கிருதச் சொல் ஆகும். 'யோகம் என்றால் அலையும் மனதை அலையாமல் ஒரு நேர்வழிப்படுத்தும் செயல் என்று எளிமையாகவும் உரைக்கின்றனர்.'*

*ஆசனம் என்ற சொல்லுக்கு 'இருக்கை' என்பது பொருள். உடலை ஒரு நிலையில் குறிப்பிட்ட அளவு நேரம் இருக்கச் செய்யும் உடற்பயிற்சியையும் அவை சார்ந்த நிலைகளையும் குறிக்கும் சொல்லே யோகாசனம்.*

*யோகாசனம் = யோகம் + ஆசனம், அதாவது மனத்தை அலைபாய விடாமல் ஒருநிலைப்படுத்தி செய்யப் படும் உடற்பயிற்சி என்று பொருள். மனத்தை அலைபாயாமல் தடுப்பதற்கே பெரும்பாலான யோக உடற்பயிற்சிகளில் கண்களை மூடிக்கொள்கின்றனர். மேலும் யோகாசனங்கள் அனைத்தும் மானிட உடம்பில் உள்ள பருப் பொருள்களுக்காகவே (தசை, எலும்பு, ஈரல்) செய்யப்படுகின்றன. சில யோகாசனங்கள் இரத்த ஓட்டத்தைச் சீர்படுத்தினாலும் அவை இரத்த ஓட்டத்திற்காக மட்டும் செய்யப்படும் பயிற்சி ஆகாது.*

*இதைப் போலவே சில யோகாசனங்கள் சுவாசத்தைச் சீர்ப்படுத்தினாலும், சுவாசம் சீர்ப்படுத்தலுக்கு என்று சுவாச பந்தனம், பிராணயாமா போன்ற தனிப்பயிற்சிகள் உள்ளன. அதனால் யோகாசனம் என்பது உடற் பயிற்சியும் அவை சார்ந்த நிலைகளும் மட்டுமே.*

*தமிழ் மருத்துவ முறையில் கற்பம் மருந்துகள் முதன்மையானது. இது சித்தர்களால் கண்டுபிடிக்கப் பட்டவை. கற்பம் என்பது உடம்பினை நோயுறாதபடி நல்ல நிலையில் வைத்திருந்து நரை, திரை, மூப்பு இவற்றையும் பிணியினையும் நீக்கும். உடம்பின் மேன்மையை நன்குணர்ந்த சித்தர்கள் நரை, திரை, மூப்பு அறியா நல்லுடலைப் பெற்றவர்கள்.*

*மனிதன் இல்லறத்தானாயினும் துறவறத்தானாயினும் உடலைப் பேணுதல் முதன்மையானது. இதனைத் திருமூலர் தம் திருமந்திரத்தில் கீழ்க்கண்டவாறு கூறுகின்றார்.*

***உடம்பார்அழியில் உயிரார் அழிவர்***
***திறம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்***
***உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே***
***உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.***

*உடலைக் காப்பது கற்பம். இது உடலைக் கல்லைப் போலாக்கும். கல்லினால் செய்த சிலை பன்னெடுங்காலமானாலும் நரை, திரை, மூப்பு, பிணி அடைவதில்லை. கற்பம் உண்டால் காயம் அழியாது என்கிறார் திருமூலர்.*

*கற்பம் பொது, சிறப்பு என இருவகைப்படும். பொதுக் கற்பம் உடலைக் காத்து, மேனிக்கு எழிலும் பலமும் தந்து நரை, திரை, சாக்காடு வராமல் தடுக்கும். சிறப்புக் கற்பம் உடல் உறுப்புகளிலாவது உடல் முற்றுமாவது கண்ட பிணியை நீக்கி உடலுக்கு வலிமை தந்து பலம் ஊட்டும்.*

*பொது, சிறப்பு என்று பிரித்துக் கூறப்பட்ட கற்பத்துள் மூலிகை, தாது, சீவப்பொருள், அவிழ் தங்களும், மேலும் உடலைக் காக்கும் யோகாசனப் பயிற்சிகளும் பிராணா யாமம் என்று சொல்லப்படும் மூச்சுப் பயிற்சியும், யோகம், முப்புவும் அடங்கும். யோகாசனத்தாலும், மூச்சுப் பயிற்சியாலும் பிராணாய மத்தாலும் உடல் கற்பமாகும் என்கின்றனர் சித்தர்கள்.*

### ***யோகாசனம்***

*சிவயோகம் என்னும் இராஜ யோகம் பண்ணுங் காலத்துச் சித்தாசனம் என்னும் ஆசனமும், இல்லறத்தாருக்கு அவர்கள் வாயுதாரனை என்னும் உயிர்ப்பு பண்ணும் காலத்து பத்மாசனமும் சிறந்ததென்று அட்டாங்க யோக நூல்கள் கூறுகின்றன.*

*பொதுவாக ஆசனங்கள் யாவும் உடற்பயிற்சி போன்றவையே. என்றாலும் ஆசனங்கள் உடற் பயிற்சிகளிலிருந்து செயலிலும் நிலையிலும் வேறுபடுகின்றன. பொதுவான உடற்பயிற்சிகள் உடலின் மேற்புறமுள்ள உடல் தாதுக்களையே வலிமைப் படுத்துகின்றன. ஆனால் யோக இருக்கை என்னும் ஆசனங்கள் உடலின் உள்உறுப்புகளை வலிமைப் படுத்துகின்றன.*

ஆசனங்கள் தொகையால் எண்ணற்றன. இதனைத் திருமூலர் 'பல் ஆசனம்', 'எண்ணிலா ஆசனம்' என்று குறிப்பிடுவதால் அறியலாம். இருப்பினும் இவற்றுள் இன்று ஒரு சில ஆசனங்களே நடைமுறையில் உள்ளன. திருமூலர் தம் தமிழ் மூவாயிரத்தில் பதுமாசனம், பத்திராசனம், குக் குடாசனம், சிங்காசனம், சொத்திராசனம், வீராசனம், கோமுகாசனம் என்ற சிலவற்றை மட்டுமே கூறியுள்ளார். இதில் பத்திரம், வீரம், பதுமம், கோமுகம், குக்குடம் ஆகிய ஐந்து ஆசனங்களும ஞான சாதனைக்கு உரிய ஆசனங்களாகும்.

## ஆசனப் பலன்

யோகாசனப் பயிற்சியினால் உடல் உள்ளுறுப்புகள் பலம் அடைகின்றன. உடலில் வீணான சதைப் பிடிப்புகள் உண்டா வதில்லை. உடல் அழகுடன் திகழ்ந்து நோயின்றியும் வலுவுடனும் விளங்கும். உடல் முழுமைக்கும் இரத்த ஓட்டத்தை உண்டாக்கும்.

சுறுசுறுப்பு, புத்தித் தெளிவு, நினைவாற்றல், மனத்தூய்மை முதலிய உண்டாகும். மேலும் உடலை நல்ல நிலையில் வைத்திருப்பதுடன் பிணிகள் உடலில் சேராதும் தடுக்கின்றன. வந்த பிணியை நீக்குகின்றன.

யோகாசனம் செய்ய மான் தோல், புலித்தோல் சித்திரக் கம்பளம், வெண் துகில், தருப்பை ஆகிய ஆசனங்கள் சிறந்த என்கின்றனர் சித்தர்கள். மேடு பள்ளம் இல்லாத சமதளத்தில் யோகாசனம் செய்ய வேண்டும். கூனுதல், குறுகுதல் தவிர்த்து நிமிர்ந்து நேராய் இருந்து ஆசனம் செய்ய வேண்டும். பயிற்சிகளை மெதுவாயும், நிதானமாயும் செய்ய வேண்டும்.

## கோபம் தவிர்

பொதுவாக மனம் ஒரு நிலையில் இருப்பதில்லை. மனதை ஒருமைப் படுத்தும் எண்ணத் துடனேயே நம் முன்னோர்கள் இறைவழிபாடு, தவம் முதலியன செய்தனர்.

ஒவ்வொரு உடல் உறுப்புடனும் இணைக்கப் பட்டிருக்கும் நரம்பு உணர்ச்சிகளை மனம் சார்ந்து நிற்கிறது. அதனால்தான் அளவுக்கு மீறிய கோபம் ஏற்படும்போது கண் சிவந்து உடல் சூடேறுகிறது.

*கோபம் தணிந்ததும் களைப்பும் சோர்வும் ஏற்படுகின்றன. மனத்தில் மாற்றம் ஏற்பட்டால் உடலிலும் தளரும்.*

*ஒன்று வலிவு பெறும் போது மற்றதும் வலிவு பெறும். மனம் தூய்மையானால் அது உடலுக்குக் கேடு விளைவிப்பதில்லை. நன்மை உண்டாக்கும்.*

*உடலை நல்ல நிலையில் வைத்திருக்க மனத்தூய்மை வேண்டும். மனதால் உண்டாகும் காமம், வெகுளி, மயக்கம், அவா, துன்பம் ஆகியவை நீங்கின் உடலில் பிணி சேராது.*

*இதனால்தான், 'மனமது தூய்மை யானால் மந்திரம் செபிக்க வேண்டாம்' என்றனர் ஆன்றோர். ஆசன வகைகள்:*


*1.உட்காசனம்*
*2.பத்மாசனம்*
*3.வீராசனம்*
*4.யோகமுத்ரா*
*5.உத்தீதபத்மாசனம்*
*6.சானுசீரானம்*
*7.பஸ்திமோத்தாசனம்*
*8.உத்தானபாத ஆசனம்*
*9.நவாசனம்*
*10.விபரீதகரணி*
*11.சர்வாங்காசனம்*
*12.ஹலாசனம்*
*13.மச்சாசனம்*
*14.சப்தவசீராசனம்*
*15.புசங்காசனம்*
*16.சலபாசனம்*
*17.தனுராசனம்*
*18.வச்சிராசனம்*
*19.மயூராசனம்*
*20.உசர்ட்டாசனம்*
*21.மகாமுத்ரா*
*22.அர்த்தமத்ச்யோந்தராசனம்*
*23.சிரசாசனம்*
*24.சவாசனம்*
*25.மயூராசனம்*
*26.உசர்ட்டாசனம்*
*27.அர்த்த மத்ச்யோந்திராசனம்*
*28.அர்த்த சிரசானம்*
*29.சிரசாசனம்*
*30.நின்ற பாத ஆசனம்*
*31.பிறையாசனம்*
*32.பாதாசுத்தானம்*
*33.திருகோணசனம்*
*34.கோணாசனம்*
*35.உட்டியானா*
*36.நௌலி*
*37.சக்கராசனம்*
*38.சவாசனம்.'.சாந்தியாசனம்*
*39.பவனமுத்தாசனம்*
*40.கந்தபீடாசனம்*
*41.கோரசா ஆசனம்*
*42.மிருகாசனம்*
*43.நடராசா ஆசனம்*
*44.ஊர்த்துவ பதமாசனம்*
*45.பிராணாசனம்*
*46.சம்பூரண சபீடாசனம்*
*47.சதுரகோனோசனம்*
*48.ஆகர்சன தனுராசனம்*
*49.ஊர்த்துவ பரவிசுடிர ஏகபாத ஆசனம்*
*50.உருக்காசனம்*
*51.ஏக அத்த புசங்காசனம்*
*52.யோகா நித்திரை*
*53.சாக்கோராசனம்*
*54.கலா பைரப ஆசனம்*
*55.அர்த்தபாத பச்சி மோத்தாசனாம்*
*56.கவையாசனம்*
*57.பூர்ண நவாசனம்*
*58.முக்த அகத்த சிரசாசனம்*
*59.ஏகபாத சிரசாசனம்*

# தன்னியக்கம்

**ஏ. கீர்த்தனா**
*இளங்கலை வேதியியல் மூன்றாமாண்டு*

*தன்னியக்கம் அல்லது தானியக்கம் என்பது ஒரு செயற்பாட்டைத் தொடர் மனித உள்ளீடு இல்லாமல் தானாக இயங்க செய்யவல்ல கட்டுப்பாட்டு முறைமையைக் குறிக்கும்.*

*தன்னியக்கமாக்கம் இயந்திரமாக் கத்தின் அடுத்தபடி. பல்வேறு பண்ட உற்பத்தித் தொழில்கள் தன்னியக்கம் பெற்றுவருகின்றன. எடுத்துக்காட்டாகத் தானுந்து உற்பத்தியில் பல நிலைகள் தன்னியக்கமாக்கப்பட்டுள்ளன.*




*தன்னியக்கம் பல மனித தொழில்களைச் செய்து மனிதருக்கு வேலை இல்லா திண்டாட்டத்தை விளைவிக்கும் என்ற விமர்சனம் உண்டு. சில ஆபாத்தான செயற் பாடுகளைத் தன்னியக்கம் செய்வது அவசியமானது.*

*அசிமோ என்பது ஹோண்டா நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட மனிதனைப்போன்ற தானியங்கிப் பொறி (Robot) ஆகும். இது 130 சென்டிமீட்டர் உயரமும் 54 கிலோகிராம் எடையும் கொண்டது.*

*முதுகில் ஒரு பெட்டியுடன் விண்வெளி வீரரைப் போன்ற தோற்றம் கொண்டது. இது மனிதனைப் போலவே இரண்டு கால்களாலும் நடக்கவல்லது.*

*இதன் வேகம் மணிக்கு ஆறு கிலோமீட்டர்கள் ஆகும். இது ஹோண்டாவின் ஜப்பானில் உள்ள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவில் உருவாக்கப்பட்டது.*

*நானோ தானியங்கியல் (nanorobotics) என்பது நானோ மீட்டர் (10-9 மீட்டர்) அளவிலான*

*மிக நுண்ணிய இயந்திரங்கள் பற்றிய இயல்.*

*ஒரு மீட்டரின் ஒரு பில்லியனில் ஒரு பங்கு ஒரு நானோ மீட்டர் (Nanometer) ஆகும். ஒரு மில்லி மீட்டரின் ஒரு மில்லியனில் ஒரு பங்கு ஒரு நானோ மீட்டர்.*

| |
|---|
| ஒரு நானோ மீட்டர் = 110-9 மீட்டர் = 1/1000,000,000 மீட்டர் |
| ஒரு நானோ மீட்டர் = 110-6 மீட்டர் = 1/1,000,000 மில்லி மீட்டர் |

*இதனை உயிரியல் துறையில் பெரிதும் பயன்படுத்தலாம். இதன் இயந்திரங்கள் பயன்பாட்டுக்கு ஏற்ப பெயர் மாற்றப்படுகிறது. பொதுவாக இந்தத் தொழில் நுட்பத்தில் உருவாக்கப் படும் இயந்திரங்களை நானோ தானியங்கி என்று சொல்வார்கள்.*

*நானோ தானியங்கி மிக நுண்ணியதாக இருப்பதனால் நுட்பமான பணிகளுக்குப் பயன்படுத்தப்படும். இவை நானோ மரபணு, நானோ எறும்பு என்று இதன் வளர்ச்சி பெருகுவதுடன், மரபணு, பாக்டிரியா போன்ற நுண் உயிரி அல்லது நுண் பொருட்களை மாற்றி அமைக்கப் பயன்படும்.*

*நானோ தொழில்நுட்பத்தினால் பல ஆச்சரியப்படும் நுண் பணிகளைச் செய்ய முடியும் என்று அறிவியல் அறிஞர்கள் சொல் கிறார்கள். நானோ இயந்திரஙகள் இன்னும் கணிணி மாதிரிகளாகக் கூட முழுமையாக வடிவமைக்கப்பட வில்லை.*

*சில நானோ இயந்திரப் பகுதிக் கூறுகள் மட்டுமே கணிணி மாதிரி களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. அத்தகைய மாதிரிகளுக்கும் உறுதியான தாழ் ஆற்றல் வடிவ நிலைகள் (optimized energy state) இன்னும் காணப்பட முடியவில்லை. மேலும், இத்தகைய ஆற்றல் நிலைகளைக் கணக்கிட பல நூறு மணி நேர அவகாசம் தேவை.*

*இதனால் எதிர்கால நானோ தொழில்நுட்பத்தின் வளர்ச்சியே திறன் வாய்ந்த கணிணிகளைச் (super computers) சார்ந்துள்ளது. மேலும் இத்தகைய அணுப் பரிமான கட்டுப்பாடுகளுக்கு அணுவிலும் அளவு குறைவானவற்றை அதாவது, மின் கூடுகளைக் (orbitals) கட்டுப்படுத்த வேண்டியுள்ளது.*